www.padippakam.com

டிசம்பர் 2004

ரூ. 5.00




# புதிய ஜனநாயகம்







## "சங்கர மடத்தை மூடு! ஜெயேந்திரனைத் தூக்கிலிடு!"

– ஓங்கி ஒலிக்கும் புரட்சிக் குரல்!






www.padippakam.com

# ‘ஜெகத்குரு’ கைது:
# காஞ்சிபுரம் கூட சீந்தவில்லை

**ச**ங்கராச்சாரி ஜெயேந்திரனை சங்கரராமன் கொலை வழக்கில் முல் குற்றவாளியாக, போலீசு கைது செய்து சிறையிலடைத்ததைக் கண்டு பார்ப்பன பயங்கரவாதிகள் அலறுகிறார்கள். கைதுக்கு எதிராக இந்தியா முழுக்க பெரும் கலவரத்தைத் தூண்ட முயற்சித்துத் தோற்றுப் போனார்கள்.

இருந்தும் அத்வானி - அசோக் சிங்கால் தலைமையிலான பார்ப்பன பயங்கரவாதிகள், சாயம்போன நரிக் கூட்டங்கள் போல் இந்தியா முழுக்க தெருக்களில் ஊளையிட்டுத் திரிகிறார்கள். ''சங்கராச்சாரியைக் கைது செய்தது ஒட்டுமொத்த இந்து சமுதாயத்தையும் அதிர்ச்சியிலும் கவலையிலும் ஆழ்த்தியிருக்கிறது'', ''இந்துக்களின் மன உணர்வுகளை உலுக்கி விட்டது'', ''சோமநாத ஆலய இடிப்புக்குப் பிறகு இந்துக்கள் மீது நடத்தப்பட்ட மிகப் பெரும் வரலாற்று துயரம் இது'' என்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் பாம்பு போல மூலைக்கு மூலைச் சீறுகிறார்கள்.

சங்கராச்சாரியைக் கைது செய்து சிறையில் அடைத்ததற்காக மக்கள் - அவர்கள் பாஷையில் ''இந்துக்கள்'' - உண்மையில் துடிதுடித்துத் துயரக் கடலில் விழுந்து விட்டார்களா என்பதை அறிய நாம் சங்கரமடத்தின் தலைமைப்பீடமான காஞ்சிபுரத்திற்கு உடனடியாகச் சென்று மக்களைச் சந்தித்தோம்.

சங்கராச்சாரி ஜெயேந்திரனின் கோட்டைகளாகக் கருதப்படும் சங்கரமடம் - காமாட்சி அம்மன் கோயில், சங்கரராமன் படுகொலை செய்யப்பட்ட வரதராஜ பெருமாள் கோயில் ஆகிய இடங்களின் அருகே வசிக்கும் மக்கள் மற்றும் சங்கரராமன் குடும்பத்தினர் ஆகியோரைச் சந்தித்தோம்.

''பரமசிவனிடமே, நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே'' என்று நக்கீரர் கூறும் போது, சங்கராச்சாரி எம்மாத்திரம்? சட்டத்தின் முன் அவர் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்'' என்றார், 74 வயது முதியவர் சிவராமகிருஷ்ணன்.

''காஞ்சிபுரத்தின் இரண்டு தலைமுறை வரலாறு தெரியும் தம்பி, எனக்கு. சங்கரமடம் 2000 வருடம் பாரம்பரியம் மிக்கது என்பது எல்லாம் ஏமாற்று! 20 வருடமாகத்தான் இந்த ஆர்ப்பாட்டம்'' என்றார். ''35 வருடத்திற்கு முன் சங்கரமடம் இருக்கும் இடத்தில் ஒரு குடிசையும் தோட்டமும்தான் இருந்தது!'' என்றார், பழைய நினைவுகளில் மூழ்கியபடி.

''பெரியவர் சந்திரசேகர சுவாமிகள் எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தனியாகத்தான் நடந்துச் செல்வார். இவரோ (ஜெயேந்திரன்) 'ஏ.சி.' கார் இல்லாமல், துப்பாக்கி, போலீசு இல்லாமல் ஒரு அடி கூட நகரமாட்டார். இவர் துறவியாகவும் இல்லை; தூய ஆன்மீகவாதியாகவும் இல்லை. 'மைனாரிட்டி' சமூகத்தை மூர்க்கமாக எதிர்த்த திமிர் பிடித்த மதவாதி. இந்து மதத்திற்குக் கூட இவர் எதுவும் செய்யவில்லை. பணக்காரப் பார்ப்பனர்களுக்குத்தான் பாதுகாப்பாக இருந்தார். ஐகோர்ட்டில் எத்தனையோ சாமியார்களை விசாரித்து இருக்கிறார்கள். இவரை மட்டும் விசாரிக்கக் கூடாதுன்னு ஏன் ஆர்ப்பாட்டம் செய்யணும்?'' என்றார். மீண்டும் தன் பெயரை அழுத்தம் திருத்தமாக ''சிவராம கிருஷ்ணன், மேலண்டை ராஜவீதி, பெரிய காஞ்சிபுரம்'' என்று எழுதுங்கள் என்றார். இந்த இடம் சங்கரமடத்திலிருந்து கூப்பிடும் தூரத்தில் இருக்கிறது.



சங்கரராமனின் மனைவி பத்மா, மகன் ஆனந்த் சர்மா.
(உள்படம்) கொலை செய்யப்பட்ட சங்கரராமன்.

சங்கராச்சாரியின் கைதைக் கண்டித்து நவம்பர் 13-ந் தேதி, காஞ்சிபுரத்தில் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்து இருந்தது, பி.ஜே.பி., இந்து முன்னணி மற்றும் ஆர்.எஸ்.எஸ். கும்பல். ஆனால், சங்கரமடத்தின் வாசற்படியில் இருக்கும் கடைகள் கூட அன்று திறந்து இருந்தன. ''ஏன் கடையைச் சாத்தவில்லை?'' என்று நாம் அவர்களிடம் கேட்டதற்கு, ''சங்கராச்சாரியால எங்களுக்கு என்ன லாபம்? உண்மையான சாமியாரா இருந்தாக்கூட கடையச் சாத்தலாம். அதுவும் இல்ல'' என்றனர், கோபத்துடன். ''இந்த மடத்தால, எங்களுக்குத் தினமும் தலைவலி! பொழுது விடிஞ்சா போதும் இன்னிக்கு ஜனாதிபதி வர்றார், இன்னைக்கு முதல் மந்திரி வர்றார்ன்னு தெருவுல ஒருத்தரக்கூட நடக்கவுட மாட்டாங்க போலீசு. இந்த 2 நாளாதான் நாங்க போலீசு தொந்திரவு இல்லாமல சுதந்திரமா இருக்கோம்'' என்றனர், அத்தெருவிலுள்ள கடைக்காரர்கள். ''சாமியாருக்கு எதுக்கு 'டவுனு'க்குள்ள மடம்? வியாபாரமா பண்றாரு?'' என்றனர் கோபத்துடன்.

●●●

**அ**ங்கிருந்து அரை பர்லாங் தூரத்தில் இருக்கும் காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றோம். ஆந்திர மாநிலத்து பக்தர்கள் அதிகமான பேர் கோயிலை பக்தியுடன் சுற்றிக் கொண்டிருந்தனர். தெலுங்கில் நாம் அவர்களிடம் பேச்சுக் கொடுத்தோம். ''கொலை வழக்கில் சங்கராச்சாரி கைது செய்யப்பட்டு

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 20**

**இதழ் 2**

**டிசம்பர் 2004**

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும்**
**மற்றும்**
**அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை-600 024.**


# பார்ப்பன "மாஃபியா" சங்கராச்சாரி!

மனித இனத்தின் துன்பங்களையும் துயரங்களையும் உள்ளே போட்டுப் பூட்டப் பட்டிருந்த நல்வாழ்வுச் சாபப்பெட்டியைத் (பண்டோராவின் பெட்டி எனப்படுவது) திறந்தபோது பாம்பு, தேள், பூரான் போன்ற நச்சு உயிரினங்களாக அவை வெளியே வந்ததென்று ஒரு கிரேக்க பழங்கதை மரபு கூறுவதுண்டு. அதைப்போன்று, சங்கர ராமன் கொலை வழக்கை விசாரிக்கப் போக, காஞ்சி சங்கர மடம் புரிந்து வந்த ஏராள மான ஒழுக்கக் கேடுகள், அக்கிரமங்கள் அட்டூழியங்கள் - ''பரிகாரமே தேட முடி யாத பாவச் செயல்கள்'' பற்றிய உண்மைகள் தோண்டத் தோண்ட வெளிவருகின் றன.. வெளியே, காவி கட்டிய துறவிகளாக நடித்துக் கொண்டு உள்ளே சுகபோக, பாலியல் களியாட்டங்களில் சங்கராச்சாரிகள் ஈடுபட்டிருந்தனர். ஆன்மீக - மதச் சேவைகளைப் பெயருக்குச் செய்து கொண்டு, உண்மையில் அதிகாரத் தரகு வேலை களையும், அரசியல்வாதிகள், முதலாளிகள்மற்றும் இரகசிய உலகப் பேர்வழிகளின் செல்வங்களைப் பதுக்கி வைக்கும் கருவூலமாக சங்கர மடம் விளங்குகிறது. அரசுத் தலைவர்கள் முதல் நீதிபதிகள் - போலீசு அதிகாரிகள், பெரும் தரகு - அதிகார முத லாளிகள், நிதி நிறுவனங்களின் தலைவர்கள் வரை அவரவர் தொழில்கள் தொடர் பான காரியங்களை முடித்துத் தரும் தலைமைச் செயலகமாக சங்கர மடம் இயங்கி வந்திருக்கிறது.

அதனால்தான், ஒரு சில விதிவிலக்குகள் தவிர சமூகத்தின் அனைத்துப் பிரிவு உயர்மட்டத்தினரும் ஒரு கொலைக் குற்றவாளியான ஜெயேந்திரனுக்கு சட்டத்திற்கு மேலான தனிச்சிறப்பான தகுதியில் வைத்து நடத்தப்பட வேண்டும் என்று கோரு கின்றனர். இந்தக் கோரிக்கைகளை நிராகரித்து, கடும் நடவடிக்கை எடுப்பதைப் போல நடந்துவரும் ஜெயலலிதா அரசு கூட உண்மையில் ஜெயேந்திரனை அரசு மரி யாதைக்கு மேல் பார்ப்பன - சனாதன தர்ம ஆச்சாரப்படியே நடத்துகிறது. இருந்த போதும் கொலைக் குற்றமே புரிந்தாலும் ''இந்து துறவி'' என்பதால் அவருக்கு இந்தி யத் தண்டனைச் சட்டம் பொருந்தாது என்று கூறி வெறியாட்டம் போடுகிறது ஆர்.எஸ்.எஸ். - பார்ப்பன கும்பல். காரணம், காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரன் அர சியலுக்கு அப்பாற்பட்ட மதவாதியாக இல்லை. இந்துமதவெறி பாசிச பார்ப்பன பயங்கரவாதியாகச் செயல்பட்டிருக்கிறார். ஆதீனங்கள், மடாதிபதிகள், பீடாதிபதி களையெல்லாம் திரட்டி மதவெறி பாசிச அரசியலுக்குச் சேவை புரிந்திருக்கிறார்.

சங்கரராமன் கொலை வழக்கை விசாரிக்கும்போது அப்பு என்கிற கிருஷ்ணசாமி யின் கிரிமினல் குற்றக் கும்பலுக்கும் - சங்கரமடத்துக்கும் உள்ள நெருக்கமான உறவு கள் தெரிய வந்தன என்று போலீசு கூறுகிறது. ஆனால் போலீசு அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், மற்றும் தொழிலதிபர்களுக்கு விருந்து வைப்பதற்கென்றே நவீன வசதி கள் விருந்தினர் மாளிகைகள், நவீன கார்கள், செய்தித் தொடர்பு சாதனங்கள், அதி நவீன ஆயுதங்கள் வைத்துக் கொண்டு மிரட்டிப் பணம் பறிப்பது, ஆள் மட்டுமல்ல, பாம்புத்தோல் - சந்தன மரங்கள் - போதை மருந்து முதலிய பொருட்களைக் கடத்து வது, கூலிக்குக் கொலை புரிவது என்று பல்வேறு கிரிமினல் குற்றங்கள் புரிவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறது இந்தக் கும்பல்.

ஆந்திரா, மராட்டியம் மற்றும் இந்தி பேசும் மாநிலங்களில்தாம் இத்தகைய குற் றக்கும்பல்கள் ஆதிக்கம் அதிகமாக இருப்பதாக இதுவரை செய்திகள் வந்தன. அவற் றுடன் போட்டிபோடும் அளவுக்கு தமிழ்நாட்டிலும் இத்தகைய கும்பல்களின் ஆதிக் கம் பெருத்துவிட்டது. இந்த உண்மை வெளியே தெரியாதவாறு செய்தி ஊடக ஒத்து ழைப்புடன் போலீசும் அரசும் பாதுகாக்கின்றன. சண்முகசுந்தரம், விஜயன் போன்ற பிரபல வழக்கறிஞர்கள் தாக்கப்படும்போதும், வெங்கடேசப் பண்ணையார், வீரமணி போன்றவர்களது என்கவுண்டர்களின் போதும்தான் சில தாதாக்களின் பெயர்கள் அறிய வருகின்றன. குற்றக் கும்பல்களின் பட்டியலை வெளியிட்ட போதுகூட அப்பு போன்ற பெரிய கொடிய தாதாக்களின் பெயர்களை வெளியிடாது போலீசுத்துறை பாதுகாக்கிறது. தமிழ்நாட்டின் அனைத்துப் பெருநகரங்களிலும் இப்ப டிப்பட்ட குற்றக் கும்பல்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள், கிரிமினல் குற்றக் கும்பல்கள், போலீசு-அதிகார வர்க்கம் ஆகிய முக்கூட்டு மேலும் விரிவாகி மதவாதிகள்-நிறுவனங்கள் இணைந்த வலைபின்னல் மக்களை மூச்சுத் திணற இறுக்குகிறது. இனி, மக்கள் குடியுரிமை, ஜன நாயக உரிமை மட்டுமல்ல, சுயமரியாதையுடன் வாழ வேண்டுமானால் கூட, இந்த வலைப்பின்னலை அறுத்தெறிய வேண்டும். இந்த நான்கு பிரிவினரும் ஒருவரோடு ஒருவர் சமரசம் செய்து கொண்டு நிழல் சண்டை போட்டுக் கொண்டு தப்பித்துக் கொள்கின்றனரே தவிர இவர்களின் ஆதிக்கத்திலிருந்து மக்கள் விடுபட அனுமதிக் கவே மாட்டார்கள். மக்கள்தாம் புரட்சிகர அமைப்புகளில் திரண்டு இந்த நாசகார சக்திகளை அழித்தொழிக்க வேண்டும். ●

படிப்பகம்

# பார்ப்பன பயங்கரவாதிகளின் கூடாரமே சங்கர மடம்

ஜெகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் என்றழைக்கப்பட்ட சுப்பிரமணி, சங்கரராம அய்யர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு முதல் குற்றவாளியாகக் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார். தீபாவளி, பொங்கல், புத்தாண்டு என எல்லாப் பண்டிகை நாட்களிலும் அதிகாலையிலேயே தொலைக்காட்சியில் தோன்றி, தனது ஊத்தைத் திருவாய் மலர்ந்து அருளும் இந்தக் கபட சந்நியாசி ஒரு 'கிரிமினல்' என்பதைத் தமிழக அரசே பிரகடனம் செய்திருக்கிறது.

கொலைக்கு முன்னும் பின்னும் கூலிப்படையுடன் சங்கராச்சாரி நடத்திய செல்ஃபோன் உரையாடல், சங்கர மடத்தின் வங்கிக் கணக்கிலிருந்து ஜெகத்குரு தனது பிரசாதமாகக் கொலைகாரர்களுக்கு வழங்கிய பணம், பொய்க் குற்றவாளிகளுக்குக் கொடுத்த பணம், சங்கராச்சாரிக்கு கொலைவெறியைத் தூண்டிய சங்கரராமனின் இறுதி எச்சரிக்கைக் கடிதம் போன்ற பல அசைக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையில்தான் இந்தக் கைது நடந்திருக்கிறது.

''மறுக்கவும் மறைக்கவும் முடியாத அளவிற்கு ஆதாரங்கள் சிக்கி விட்டன'' என்று புரிந்து கொண்டவுடன் உலகின் ஒரே இந்து சாம்ராச்சியமான நேபாளத்திற்குத் தப்பியோட முயன்று பிடிபட்டிருக்கிறார் இந்தக் கிரிமினல்களின் ஜெகத்குரு.

**குற்றவாளிக்கு இராஜ மரியாதை!**

ஜெயேந்திரர் சாதாரண குற்றவாளி அல்ல; ஆன்மீகம், அகிம்சை என்று நாட்டுக்கே உபதேசம் செய்து கொண்டு அதன்மூலம் தனது பணபலத்தையும், அரசியல் செல்வாக்கையும் பெருக்கிக் கொண்ட ஒரு மடாதிபதி. சாதாரண மனிதர்கள் வறுமையின் காரணமாகவோ, உணர்ச்சி வயப்பட்டோதான் பல குற்றங்களை இழைக்கிறார்கள்.

ஆனால் இந்த ஜெகத்குருவோ தன்னுடைய வண்டவாளங்களைக் கேள்விக்குள்ளாக்கிய ஒரே காரணத்திற்காக ஒரு பச்சை ரத்தப் படுகொலையை ஆற அமரத் திட்டம் போட்டு நிறைவேற்றியிருக்கிறார் — அதுவும் மக்கள் மிகப் புனிதமாகக் கருதும் ஒரு கோயிலுக்குள்ளே! இந்தக் கொலையை மறைக்கவும் திசைதிருப்பவும் தனது பணபலத்தையும் அதிகாரபலத்தையும் பயன்படுத்தியிருக்கிறார்.

தெருவில் அடித்து இழுத்துச் செல்லப்படும் ரவுடிகளைக் காட்டிலும் கடுமையான முறையில் நடத்தப்பட வேண்டிய இந்தக் குற்றவாளிக்கு இங்கே ராஜ மரியாதை நடக்கிறது; சாதாரண குற்றங்கள் புரிந்த ஏழைகளை உள்ளாடையுடன் நிறுத்தி பிடரியில் கைவைத்து கையில் விலங்கு மாட்டி இழுத்து வரும் போலீசு, ஜெகத்குருவிடம் ''தயவு செய்து வாருங்கள்!'' என்று மன்றாடுகிறது; ''நான் போலீசு வேனில் ஏறமாட்டேன்'' என்று ஜெயேந்திரர் சொன்னவுடன் காரில் அழைத்து வருகிறது. 'சூத்திரன் தொட்டால் பார்ப்பானுக்குத் தீட்டு' என்ற மனுதர்மத்தை மதித்து சங்கராச்சாரியின் மீது விரல் கூடப் படாமல் போலீசு எட்ட நிற்கிறது. ''ஜெயேந்திரருக்கு ஒரு பிராமணரைக் கொண்டுதான் சமையல் செய்து தருகிறோம்'' என்று நீதிமன்றத்திலேயே அறிவிக்கிறார் அரசு வழக்குரைஞர் துளசி.

சிறையில் சாதாரண குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட விசாரணைக் கைதிகளும் குற்றமே செய்யாமல் உள்ளே தள்ளப்பட்ட அப்பாவிகளும் சிறையைக் கூட்டுகிறார்கள், கக்கூஸ் கழுவுகிறார்கள், இடுப்பொடிய வேலை வாங்கப்படுகிறார்கள். சங்கராச்சாரியோ அங்கே மூனுவேளை பூஜை செய்கிறாராம்! இந்த அகிம்சா மூர்த்தி அன்றாடம் பூஜை செய்யவில்லை என்றால் உலகமே அழிந்து விடுமென்பதால் சிறை நிர்வாகமே தேங்காய், பூ, பழம், சூடம் - சாம்பிராணி சப்ளை செய்கிறது. சாதாரணக் கைதிகளுக்கு அலுமினியத் தட்டில் வேகாத சோறு. இந்த நட்சத்திரக் கிரிமினலுக்கோ சில்வர் தட்டில் சோறு, சப்பாத்தி, பால், பழம்; குளிக்க வெந்நீர், அன்றாடம் மருத்துவச் சோதனை... இன்னபிற வசதிகள். நாட்டில் எந்தக் கொலைக் குற்றவாளிக்காவது இவ்வளவு மரியாதை நடந்ததுண்டா?

''நான் நீதிபதியிடம் வரமாட்டேன், நீதிபதியை இங்கே வரச் சொல்!'' என்று எந்தக் கட்சித் தலைவராவது போலீசிடம் சொன்னதுண்டா? ''ராகு காலத்தில் தீர்ப்பு சொல்லாதே!'' என்று நீதிபதிக்கு ஒரு கிரிமினல் உத்திரவிடுவதை யாராவது கேள்விப்பட்டதுண்டா? கைதியையே கண்ணால் பார்க்காமல் ரிமாண்டு உத்தரவு போடும் நீதிபதிகள், ரத்தம் சொட்டச் சொட்டக் கொண்டு வந்து நிறுத்தினாலும் கைதியைத் தலைநிமிர்ந்து பார்க்க மறுக்கும் மாஜிஸ்டிரேட்டுகள் — இதுதான் மக்களுக்கு நீதிமன்றத்தில் கிடைக்கும் மரியாதை! லட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் வேலை பறிக்கப்பட்டபோதோ, ஆயிரக்கணக்

ஜெயேந்திரன் ஏவிவிட்ட கூலிப்படையால், காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலுக்குள்ளேயே வெட்டிக் கொல்லப்பட்டுக் கிடக்கும் சங்கரராமனின் சடலம்.
*(நன்றி: நக்கீரன்).*



www.padippakam.com

கான அரசு ஊழியர்கள் சிறையில் அடைக்கப்பட்டபோதோ உயர் நீதி மன்றம் அவசரம் காட்டவில்லை. ஆனால், ஒரு கொலைக் குற்றவாளிக்காக விடுமுறை நாளில் உயர்நீதி மன்றத்தின் கதவுகள் திறக்கின்றன.

மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கே போகாமல் உயர்நீதி மன்றத்தில் நேரடியாக ஜாமீன் மனு தாக்கல் செய்யப்படுகிறது. அரைநாளில் நூறு ஜாமீன் மனுக்களை விசாரித்துத் தீர்ப்பு சொல்லும் உயர்நீதிமன்றம் ஜெயேந்திரர் மனுவை இரண்டு நாள் விசாரிக்கிறது. ''நீதிபதிகளின் பங்களாவிலேயே இவரைச் சிறை வைக்கலாமே'' என்று ஒரு கிரிமினலுக்காக நீதிபதியே வாதாடுகிறார்.

### ''காக்க... காக்க... கிரிமினல் காக்க''

இத்தனைச் சலுகைகள், இத்தனைச் சொகுசுகளுக்குப் பின்னரும் பார்ப்பன பாரதீய ஜனதா கும்பல் அலறுகிறது; ''அவரை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று மன்மோகன்சிங்கிடம் கண்ணீர் விடுகிறார் வாஜ்பாய்; சிறை வாசலில் சூடம்கொளுத்தி 'காக்க காக்க கனகவேல் காக்க!' என்று கொலைகாரனைக் காப்பாற்ற கந்தசஷ்டி கவசம் படிக்கிறார் இராம.கோபாலன். ''வெள்ளைக்காரன் கூட சங்கராச்சாரியைக் கைது செய்ததில்லை'' என்று விம்மி வெடிக்கிறார் அத்வானி. அமெரிக்க அதிபரிடமும் ஐ.நா. சபையிடமும் முறையிட வேண்டியதுதான் பாக்கி!

சங்கரராமன் என்ற இந்துப் பார்ப்பனரைக் கொலை செய்ததற்காக, சுப்பிரமணி (ஜெயேந்திரர்) என்ற இன்னொரு இந்துப் பார்ப்பனர், ஜெயலலிதா என்ற இந்துப் பார்ப்பனரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் இது ***இந்து விரோத நடவடிக்கை*** என்கிறது இராமகோபாலய்யரின் இந்து முன்னணி.

ஒரு இந்துக் கோயிலின் உள்ளேயே வைத்து பட்டப்பகலில் ஒரு இந்து (சங்கரராமன்) கொலை செய்யப்பட்ட போது வாய் திறக்காத இந்து முன்னணி, இன்று ஜெயேந்திரர் என்ற இந்துக் கிரிமினலுக்காக வாதாடுகிறது; ஒரு பாவமும் அறியாத சிறுபான்மை மக்களை வம்புக்கிழுத்து ''அவர்களுடைய வாக்குகளைக் கைப்பற்றத்தான் இந்தக் கைது நடவடிக்கை'' என்று கூறி கலவரத்தைத் தூண்ட முயற்சிக்கிறது.



சங்கரமடத்தின் லீலைகளை அம்பலப்படுத்தத் துணிந்ததற்காகத் தாக்கப்பட்ட ராதாகிருஷ்ணன் (இடது); திருப்பதி - திருமலையில் இருந்த வைணவ மடங்களை இடித்ததை ஆதரித்த ஜெயேந்திரனை எதிர்த்ததற்காகத் தாக்கப்பட்ட ''108 திவ்யதேச பாரம்பரிய சேவை'' என்ற அமைப்பின் பொருளாளர் மாதவன்.

### ஜெகத்குரு கொலை செய்வார் ஜட்ஜ் விசாரிக்கக் கூடாதாம்!

ஆனால், பெரும்பான்மை இந்து மக்கள் இந்தப் பித்தலாட்டத்தை நம்பத் தயாராக இல்லை. பாரதிய ஜனதா நடத்தும் ஆர்ப்பாட்டத்திலும் மனிதச் சங்கிலியிலும் பார்ப்பனக் குடுமிகளையும் மாமிகளையும் தவிர வேறு யாரையுமே பார்க்க முடியவில்லை. இதனால் ஆத்திரம் தலைக்கேறி 'துப்பாக்கி எடுப்போம், வெடிகுண்டு வீசுவோம்' என்று கூச்சலிடுகிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல். நவம்பர் 13-ஆம் தேதியன்று உயர்நீதி மன்ற வளாகத்தில் கூட்டமாக வந்திருந்த இந்த துப்பாக்கி எடுக்கும் சூரப்புலிகளை ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் வெறும் பதினைந்தே பேர் விரட்டியடித்த காட்சியையும், வழக்குரைஞர்கள் விரட்ட இவர்கள் பின்னங்கால் குடுமியில் சிக்க தெறித்து ஓடிய காட்சியையும் நாடே பார்த்தது.

சங்கரராமன் கொலை வழக்கில் வெளிவரும் ஆதாரங்களை ஆர்.எஸ்.எஸ். கும்பலால் மறுக்க முடியவில்லை. தனது ஊழல்களையும் முறைகேடுகளையும் எதிர்த்த ராதாகிருஷ்ணன், மாதவன் என்ற இரு பார்ப்பனர்களைக் கொலை செய்வதற்கு ஜெயேந்திரர் கூலிப்படையை ஏவிவிட்ட கதையும் இப்போது வெளி வந்திருக்கிறது. இவற்றையெல்லாம் ஆதாரபூர்வமாக மறுத்து வாதிடுவது சாத்தியமில்லை என்பதால் ஆர்.எஸ்.எஸ். கும்பல் தடாலடியாக அனைத்தையும் மறுக்கிறது.

''இந்துமதத்தின் தலைவரான ஒரு ஜெகத்குரு இத்தகைய இழிசெயல்களில் ஈடுபட்டிருக்க முடியாது என்று நாங்கள் நம்புகிறோம். யார் விசாரணை நடத்தி எந்த நீதிமன்றம் தீர்ப்பு சொன்னாலும் எங்கள் நம்பிக்கையை யாரும் மாற்ற முடியாது'' என்பதுதான் அவர்களுடைய வாதம். ஒரு மடத் தலைவரின் மீதான தங்களது நம்பிக்கையை இறை நம்பிக்கை போன்ற ஒரு மத நம்பிக்கையாகச் சித்தரித்து, தங்களது இந்த நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்குவது ''இந்து மத உணர்வைப் புண்படுத்துவதாகும்'' என்று வாதிடுகிறது இந்தப் பார்ப்பன பாசிசக் கும்பல்.

''ஜெகத்குருவும் அவரை ஒத்த விசுவ இந்து பரிசத்தின் காவி உடைக் கிரிமினல் கூட்டமும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள். இந்தச் சட்டமோ, நீதிமன்றமோ அவர்களைத் தண்டிக்க முடியாது; தண்டிக்கக் கூடாது'' — இதுதான் இவர்களுடைய கோரிக்கை. எனவேதான் ''மடங்களுக்குள்ளும் கோயில்களுக்குள்ளும் போலீசு நுழைவதைத் தடைசெய்ய சட்டம் இயற்ற வேண்டும்'' என்று கோரியிருக்கிறது அனைத்திந்திய சாமியார்கள் சங்கம். இதனை அத்வானியும் சுஷ்மா ஸ்வராஜும் வழிமொழிந்துள்ளனர்.

### சதுர்வேதி - மோசடி சாமியார், ஜெயேந்திரர் - ஸ்வாமிகளாம்!

பார்ப்பனச் சங்கராச்சாரி கைது செய்யப்பட்டவுடனேயே இப்படித் துள்ளிக் குதிக்கும் இந்தக் கூட்டம் சதுர்வேதி, பிரேமானந்தா போன்ற 'சூத்திர'ச் சாமியார்கள் கைது செய்யப்பட்டபோது குதிக்கவில்லை; கொந்தளிக்கவுமில்லை. செக்ஸ் சாமியார் பிரேமானந்தா, மோசடி சாமியார் சதுர்வேதி என்று எழுதும் தினமலர் போன்ற பார்ப்பனப் பத்திரிக்கைகள் ஜெயேந்திரரை கொலைகாரச் சாமியார் ஜெயேந்திரன் என்று எழுதுவதில்லை. **ஸ்வாமிகள்** என்று மிகுந்த மரியாதையுடன் அழைக்கிறார்கள்.

கிரிமினல் என்றும் கூலிப்படைத் தலைவனென்றும் அரசால் குற்றம் சாட்டப்பட்ட ஒரு கொலைக் குற்றவாளியை மகான் என்றும் உலகை உய்விக்க வந்த உத்தமன் என்றும் வருணித்து பக்கம் பக்கமாக விளம்பரம் கொடுக்கிறது காஞ்சி மடம். அவை தினமணி, இந்து நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன. பிரேமானந்தாவும் சதுர்வேதியும் தங்களைப் பற்றி இப்படி விளம்பரம் கொடுத்திருந்தால் இவர்கள் வெளியிட்டிருப்பார்களா?

'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' என்ற பார்ப்பனச் சாதிவெறிக்கு இதைவிட

வேறு என்ன சான்று வேண்டும்? இந்த மனுநீதியைச் சட்டமாகவே ஆக்கி பார்ப்பன மடங்கள், ஆதீனங்கள் போன்ற கிரிமினல் கூடாரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் பாரதிய ஜனதாவின் கோரிக்கை.

**'ஆன்மீகத்' தரகுப் பணி**

''இந்தியாவில் தகுதி தேவைப்படாத ஒரே தொழில் புரோகிதத் தொழில்'' என்றார் அம்பேத்கர். சங்கர மடத்தில் பரமாச்சாரியையும், சைவ மடத்தில் ஆதீனத்தையும் தெரிவு செய்ய முதல் தகுதி சாதி. கிரிமினலுக்கான தகுதிகள் வளர்ப்பிலேயே தம் சாதிக்காரனுக்குத்தான் உண்டு என்பதில் அவாளுக்கு அவ்வளவு அசாத்திய நம்பிக்கை. இரண்டாவது தகுதி, பத்துக் கொலை செய்தாலும் பதட்டமிட்டாமல் முகத்தைப் பராமரிக்கின்ற ''தெய்வீகக் களை''. மூன்றாவதாக, மடத்தின் மாஃபியா வேலைகள் மற்றும் மடாதிபதியின் சிற்றின்ப லீலைகள் பற்றிய இரகசியங்களைக் காப்பாற்றும் திறமை. நான்காவதாக, பெரியவர் சமாதி அடைந்து அதிகாரம் தன் கைக்கு வரும்வரை அடக்கி வாசிக்கும் 'பொறுமை'.

சின்ன பெரியவாள்களும், இளைய சன்னிதானங்களும் இப்படித்தான் பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள். இவர்கள் பட்டினத்தாரையும் வள்ளலாரையும் போலப் பரதேசியாய்த் திரிகிறார்களா? கோயில் கோயிலாய்ச் சென்று பதிகம் பாடுகிறார்களா? அல்லது சங்கரராமனுக்கு முடிவுரை எழுதிய ஜெயேந்திரர், அத்வைதத்துக்குப் பொழிப்புரை எழுதியிருக்கிறாரா?

ஒரு வெங்காயமுமில்லை. தின்பதும் தூங்குவதும்தான் இவர்களது ஆன்மீக நடவடிக்கைகள். இதைப் படித்து ஆத்திரப்படும் அம்பிகள் **சின்ன** பெரியவாளை எடை மிசினில் ஏற்றிப் பார்க்கட்டும்!

இந்து சமயப் பணி என்ற பெயரில் அரசியல் புரோக்கர் வேலை செய்யும் காஞ்சி மடத்தின் 'சமயத் தொண்டு' பற்றி இண்டியன் எக்ஸ்பிரஸில் மாய்ந்து மாய்ந்து துதி பாடும் அம்பிகளுக்கு இதெல்லாம் தெரியாதா என்ன? இருந்தாலும் தங்கள் சாதி பிராண்டைத் தூக்கிப் பிடிப்பதில் அப்படியொரு பத்திரிகா தர்மம். ''சங்கரமடத்திலிருந்து ஒரு துண்டுச் சீட்டு வந்தால் உடனே டிரான்ஸ்பர், உடனே புரமோஷன், உடனே லைசன்ஸ்...'' என்று 'பெரிவாளுடைய' செல்வாக்கை வியந்து போற்றுகிறார்களே, அது ஆன்மீகப் பணியல்ல, அரசியல் தரகு வேலை என்று அவர்களுக்குப் புரியாமலா இருக்கிறது?



**ஜெயேந்திரனுக்கு மலர்களால் பாதபூஜை செய்யும் கூலிப்படை தலைவன் அப்பு: ரவுடியிசத்தை அரவணைத்துக் கொள்ளும் பார்ப்பன ஆன்மீகம்.**

*(நன்றி: ஜூனியர் விகடன்).*

ஜெயேந்திரரின் யோக்யதை என்ன? அங்கே சொந்த மனைவியோடு போகிறவருக்கும் ஆசி! அடுத்தவன் மனைவியோடு போகிறவனுக்கும் ஆசி! காமக் கொடூரன் சரவணபவன் அண்ணாச்சிக்கும் ஆசி! யோக்கியமான இந்துவுக்கும் ஆசி! சாராய மல்லையாவுக்கும் ஆசி! சமஸ்கிருதப் பாடசாலைக்கும் ஆசி! மக்கள் யாரையெல்லாம் களவாணி, சாராயக் கடைக்காரன், பொறுக்கி அரசியல்வாதி என்று காறித் துப்புகிறார்களோ அனைவரும் சங்கராச்சாரியிடம் வரிசையாகப் போய்க் காலில் விழுந்து ஆசி பெறுகிறார்கள்.

அம்பானி நோய்வாய்ப்பட்டுக் கிடக்கையில் தனி விமானம் ஏறி அவசர அவசரமாகப் போய் சங்கராச்சாரி ஆசீர்வாதம் வழங்குகிறார். செத்துப் போன அம்பானியின் வாரிசுகளோ ஜெயேந்திரர் கைதானவுடன் பதறுகிறார்கள். 30 ஆண்டுகளில் குறுக்கு வழியில் பணக்காரனான குற்றவாளி அம்பானி கும்பலுடன் சுவாமிகளுக்கு என்ன ஆன்மீக உறவு?

**ஊர்தாலி அறுத்து துறவிகள் சேர்த்த சொத்து!**

கோடிக்கணக்கில் சொத்துக்களைப் புரட்டும் இந்த மடாதிபதிகள் யாராவது தங்களைப் பின்பற்றும் அல்லது தங்களோடு மதம் என்ற வகையில் இணைந்த பக்த கோடிகள் யாருக்காவது ''இவ்வளவு கோடி சொத்து, இன்றைய தேதிக்கு இலாபம் இவ்வளவு'' என்று கணக்கு காட்டுவதுண்டா?

இன்று காஞ்சி மடத்தின் சொத்து 6000 கோடி (1.2 பில்லியன் டாலர்கள்) என்று இந்துமதம் சார்ந்த இணையத்தளங்கள் கணக்கு சொல்கின்றன. திருவாவடுதுறைக்கு 1500 கோடி, மதுரை ஆதீனம் 1000 கோடியாம்! சமீபத்தில் முளைத்து வளர்ந்த மாதா அம்ருதானந்தா மாயிக்கு 1600 கோடியாம்! இன்னும் பங்காரு அடிகள், சாயி பாபா, கல்கி, வைணவ ஜீயர்கள், ரவி சங்கர்ஜி, சிவசங்கர் பாபா, பலவகையான 'ஆனந்தா'க்கள் இருக்கிறார்கள். சேலம் குட்டி சாமியார் மூக்கு வெளுப்பதற்குள் 300 கோடியாவது சேர்த்து விடுவார்.

ஜெகத்குருக்களும், ஆதீனங்களும் கழனியில் இறங்கி நாத்து நட்டு அறுப்பு அறுத்தா மடத்திற்குச் சொத்து சேர்த்தார்கள்?

ஒவ்வொரு மடத்துக்கும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களும், மன்னர்களும், வணிகர்களும் தங்க வைடூரியங்களையும் நிலங்களையும் தங்களின் கீழ் வேலை செய்த கூலி விவசாயிகளுடன் சேர்த்தே கொடுத்து 'குடிநீங்கா தேவதானம்' என்ற பெயரில் அடிமைப் படுத்தினர். பருவநிலை பொய்த்தாலும் மேல்வாரம், கீழ்வாரம் என்று கடுமையான வரிகளைப் போட்டு, குத்தகை பாக்கி அளக்காத கூலி விவசாயிகளைக் கொன்று, புதைத்த இடத்தில் தென்னங்கன்றை நட்டு வைத்த மடங்களின் 'சிவத் தொண்டை' இன்றும் மக்கள் வாய்வழிக் கதையாகப் பேசிவருகின்றனர்.

ஊரே எறும்புப் புற்றிலும், எலி வளையிலும் அரிசியெடுத்துப் பசி போக்கிய பஞ்சகாலத்திலும் குகைக்

www.padippakam.com

குள் தானியங்களையும், செல்வங்களையும் பதுக்கி வைத்து, மக்களை வரி போட்டுக் கசக்கிப் பிழிந்த இந்த மடங்களின் கொடுங்கோன்மையை எதிர்த்து மக்கள் கலகம் செய்த வரலாறு திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டில் ''குகையிடிக் கலகம்'' என்று குறிப்பிடப்படுகிறது.

**ஆன்மீகவாதிகளல்ல ஆளும் வர்க்க ஏஜெண்டுகள்**

அன்று முதல் இன்று வரை மடங்களையும் ஆதீனங்களையும் தீனி போட்டு வளர்ப்பவர்கள் ஆளும் வர்க்கங்கள்தான். நிலப்பிரபுக்களின் கொடுங்கோன்மையையும், சுரண்டலையும் சாதி ஆதிக்கத்தையும் நியாயப்படுத்தவும், கருமவினையென்றும் தலைவிதியென்றும் கூறி தங்கள் துன்பத்தைச் சகித்துக் கொள்ளுமாறு மக்களை மூளைச் சலவை செய்யவும் மடாதிபதிகளுக்கு மன்னர்கள் கொடுத்த லஞ்சம்தான் பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள்.

பார்ப்பனக் குருமார்களையும் ஆதீனங்களையும் மன்னர்கள் பணிந்து வணங்கக் காரணம் அவர்களின் தெய்வீக ஆற்றல் மீது கொண்ட மரியாதை அல்ல; அது ஒரு நாடகம். ''நாடாளும் மன்னனே பணிந்து வணங்கும்போது மடாதிபதிகள் தெய்வத்தின் அவதாரமாகத்தான் இருக்க வேண்டும்'' என்று மக்களை நம்ப வைப்பதற்காக நடத்தப்பட்ட நாடகம்.

அந்த நாடகம் இன்றும் தொடர்கிறது. மல்லையாவும், அம்பானியும், பிர்லாவும் கோடி கோடியாய்க் கொட்டியளந்துவிட்டு ஜெயேந்திரரின் காலிலும் விழுகிறார்களே, அவர்களுக்குத் தெரியாதா இந்த் 'துறவி'யின்யோக்கியதை? அப்துல் கலாம் முதல் அமைச்சர்கள், அதிகாரிகள் வரை எல்லோரும் ஜெயேந்திரரின் முன் பணிவாகத் தரையில் உட்கார்கிறார்களே, பீடத்தில் அமர்ந்திருக்கும் சுப்பிரமணி 'முழு மூடன்' என்ற உண்மை அவர்களுக்குத் தெரியாதா?

சங்கரமடம் எனும் சோம்பேறிப் பார்ப்பனக் கூட்டத்தை ஆளும் வர்க்கம் சும்மா தீனி போட்டு வளர்க்கவில்லை. மக்களை மழுங்கடிக்கும் அருள்வாக்கு, மக்களை அடிமைப்படுத்தும் சாதிவெறி, மக்களைப் பிளவுபடுத்தும் மதவெறி என்பவையெல்லாம் சங்கராச்சாரி ஆளும் வர்க்கத்துக்குத் திருப்பிச் செலுத்தும் நன்றிக் கடன்.

''சிவன் சொத்து குல நாசம்'' என்று மிரட்டுகிறார்களே, இவர்கள் சேர்த்திருப்பதுதான் பல குலங்களை நாசம் செய்து பிடுங்கிய சொத்து. இப்படி ஊர் தாலி அறுத்துச் சேர்த்த சொத்தை நிர்வாகம் செய்வதற்கு வள்ளலாரையும் பட்டினத்தாரையுமா நியமிக்க முடியும்?



**மற்ற விசாரணைக் கைதிகளை, நீதிமன்றத்திற்கு கைவிலங்கு போட்டு இழுத்துவரும் போலீசு, கொலைகாரன் ஜெயேந்திரனின் மீது கைவிரல் கூடப் படாமல் அழைத்து வருகிறது.**

அதனால்தான் திருவாவடுதுறை பெரிய ஆதீனத்துக்குச் சின்ன ஆதீனம் மருந்து வைக்கிறார். சின்ன ஆதீனமாக நியமித்த சுவாமிநாதனுக்கு குருபக்தி இல்லையென்று நாலே நாளில் விரட்டியடித்துவிட்டுப் போலீசில் புகாரும் கொடுக்கிறார் மதுரை ஆதீனம்.

''மற்ற ஆதீனங்கள் சாமியார்களைப் போல் அல்ல, நாங்கள் ஒரிஜினல் ஆதிசங்கரன் பரம்பரை'' என்று பார்ப்பனத்திமிருடன் பீற்றிக் கொண்டிருந்த சங்கரமடம் இன்று சந்தி சிரிக்கிறது. ஜனாதிபதிகள், பிரதமர்கள், அதிகாரிகள், நீதிபதிகள், பத்திரிக்கைகள் அனைவரையும் கைக்குள் போட்டுக் கொண்டு, தங்களது லீலைகளைச் சாமர்த்தியமாக அமுக்கி வந்த காம-கேடிகள் இன்று சிக்கிக் கொண்டு விட்டார்கள்.

''ஜெயேந்திரர் விஜயேந்திரரின் தம்பிகளும் அவர்களது உறவினர்களும் தான் சங்கரமடத்தின் சொத்தை ஆதிக்கம் செய்கிறார்கள்'' என்று **'இந்து'** பத்திரிக்கையே எழுதுகிறது. வாரிசு அரசியல், ஊழல் அரசியல் என்று அரசியல் வாதிகளைச் சாடும் முற்றும் துறந்த முனிவர்களின் யோக்கியதை இது.

**பக்தர்களை மொய்க்கும் பிணந்தின்னிகள்!**

மக்களிடம் நிலவுவது கடவுள் பக்தி; மடாதிபதிகளிடம் இருப்பதோ காணிக்கை பக்தி. பக்தனைக் கைது செய்து இழுத்துப் போவதைப் பற்றி இந்து முன்னணிக்குக் கவலை இல்லை. பரமாச்சாரியாளைப் பிடித்து இழுத்தால் பல ஆயிரம் கோடி சொத்தும் சேர்ந்து வருகிறதே, அதனால்தான் பதறுகிறது இந்து முன்னணி; ''எண்பது கோடி இந்துக்களின் தலைவரைக் கைது செய்வதா?'' என்று எகிறுகிறார் அத்வானி; மடத்துக்குள்ளே போலீசு நுழைவதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்று முழங்குகிறது பாரதிய ஜனதா.

''தெரு வோர விலைமாதர்களைக் கைது செய்யலாம். ஆனால், நட்சத்திர ஓட்டல் விபச்சார விடுதிகளில் போலீசு நுழையக் கூடாது'' என்பதைப் போல, ''சதுர்வேதியைக் கைது செய்து கொள் — சங்கராச்சாரி மீது கை வைக்காதே'' என்கிறார்கள் இவர்கள்.

'ஜெயேந்திரர் கொலை செய்திருப்பார்' என்பதில் இந்து முன்னணிக்கும், கூலிப்படைக்கும் பணம் கொடுத்ததாகக் கூறப்படும் டி.வி.எஸ். முதலாளிக்கும், விமானம் வழங்கிய விஜய்மல்லையாவுக்கும் எந்தச் சந்தேகமும் இருக்காது. இப்படிச் 'சொதப்பி' விட்டாரே என்ற வருத்தமிருக்கலாம், அவ்வளவுதான்.

ஆனால் மக்கள் இதனை நம்ப மறுக்கிறார்கள் என்பதுதான் இவர்களுடைய பிரச்சினை.

www.padippakam.com

**ஜெயேந்திரரின் தண்டிக்கப்படாத குற்றங்கள்!**

சங்கரமடம் என்பது பார்ப்பன மடம். கிரிமினலாக இருந்தாலும் ஒரு பார்ப்பான்தான் அங்கே சங்கராச்சாரியாக முடியுமே தவிர, எப்பேர்ப்பட்ட பக்தனாக இருந்தாலும் சூத்திரரோ, பஞ்சமரோ சங்கராச்சாரியாக முடியாது.

செத்துப்போன சங்கராச்சாரியின் காலத்தில் பார்ப்பனரல்லாத சாதாரண மக்கள் யாரும் அந்த மடத்தைத் திரும்பிப் பார்த்தது கூட இல்லை.

'இந்து ஒற்றுமை' என்ற பெயரில் பார்ப்பனப் பாசிசக் கும்பலான ஆர்.எஸ்.எஸ்., தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதி மக்களை வளைக்கத் தொடங்கியபோதுதான் ஜெயேந்திரருக்கு 'சேரிப் பாசம்' வந்தது. சிறுபான்மை மக்களுக்கெதிரான கூலிப் படையாக தலித் மக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத்தான் ஜெயேந்திரரின் 'சேரி விஜயம்' தொடங்கியது.

அப்போதும் தன்னுடைய சாதித் திமிரை ஜெயேந்திரர் கடுகளவும் விடவில்லை. கூத்திரம்பாக்கம் தலித் மக்கள் கோயிலில் நுழைய உரிமை கேட்டபோது "நீங்கள் சுத்தமில்லை" என்று கூறியது, தன்னைத் 'தரிசிக்க' வந்த மராத்திய முதல்வர் ஷிண்டே, தலித் என்பதால் அவரைப் பத்தடி தள்ளி நிறுத்தியது, சங்கராச்சாரி நடத்தும் கல்லூரியில் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தனிப் பந்தியில் சோறு, தலித் மக்களை ஒடுக்கும் மதமாற்றத் தடைச் சட்டம்.... என்று ஜெயேந்திரர் இழைத்துள்ள தீண்டாமைக் குற்றங்களுக்காக வழக்கு தொடர்ந்திருந்தால் சாகும் வரையில் இந்தச் சங்கராச்சாரி உள்ளேயே கிடக்க வேண்டியிருக்கும்.

கிறித்தவ, இசுலாமிய மக்களுக்கு எதிரான மதவெறியைத் தூண்டும் பேச்சு, குஜராத் படுகொலை நாயகன் மோடிக்கு ஆதரவு, அயோத்தி விவகாரத்தில் நடத்திய அயோக்கியத்தனங்கள் ஆகியவற்றுக்காகத் தண்டிப்பதாக இருந்தால் ஜெயேந்திரர் இன்னொரு பிறவி எடுத்துச் சிறை செல்ல வேண்டும்.

சங்கரராமன் கொலையைக் காட்டிலும் கொடியவை மேற்கூறிய குற்றங்கள். தன்னுடைய காமலீலைகளுக்கும், ஊழல்களுக்கும் எதிராகக் கேள்வி எழுப்பிய ஒரே குற்றத்துக்காக சொந்த சாதிக்காரனை, சங்கரமடத்தின் பக்தனைக் கொலை செய்யத் துணியும் ஒரு கிரிமினல் — மற்ற சாதி, மத மக்களை மயிருக்குச் சமமாகக் கூட மதிக்க மாட்டான் என்பதில் ஐயம் வேண்டுமா?

**தமிழகத்தை குஜராத் போலாக்க சதி செய்கிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல். இச்சதியை முறியடிக்க இறைநம்பிக்கை கொண்ட மக்களும், பெரியாரின் தொண்டர்களும், ஜனநாயகவாதிகளும், கம்யூனிஸ்டுப் புரட்சியாளர்களும் இணைந்து போராடுவோம்!**

**காறி உமிழ்கிறார்கள் மக்கள்!**

இன்று தினமலர், தினமணி போன்ற பார்ப்பனப் பத்திரிக்கைகள் ஜெயேந்திரருக்கு ஆதரவாக வரிந்து வரிந்து எழுதினாலும், இந்து முன்னணிக் கும்பல் கரடியாய்க் கத்தினாலும் அதைக் கேட்க நாதியில்லை. பெரும்பான்மை மக்கள் நாத்திகர்களாகி விட்டார்கள் என்று இதற்குப் பொருளல்ல; சங்கராச்சாரி ஒரு பார்ப்பனக் கிரிமினல் என்பதைத் தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம் அவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். பார்ப்பனர்களிலேயே கணிசமான பிரிவினர் ஜெயேந்திரர் கொலை செய்திருக்கக் கூடும் என்பதைத் தயக்கத்துடன் ஒப்புக் கொள்கிறார்கள்.

இந்தக் கிரிமினலுக்கு ஆதரவாக வாதாடுவதற்கு வடநாட்டிலிருந்து வந்து இறங்குகிறார்கள் அத்வானி, தொகாடியா, அசோக் சிங்கால் போன்ற ஆர்.எஸ்.எஸ். பாசிசக் கிரிமினல்கள். பெரியார் பிறந்த தமிழ் மண்ணில் பார்ப்பனப் பாசிசத்தை விதைக்க வெறி கொண்டு முயற்சிக்கிறார்கள்.

இனி, ஜெயேந்திரருக்கு ஆதரவாகக் கூட்டம் சேர்க்க ஆர்.எஸ்.எஸ். கும்பல் தமிழகத்தில் மதவெறியைத் தூண்டும்; வதந்திகளைப் பரப்பி ஆங்காங்கே கலவரத்தைத் துவக்கி வைக்கும். நாத்திகர்களும் கம்யூனிஸ்டுகளும் சங்கரமடத்தின் சொத்தையும் இந்து மத நிறுவனங்களின் சொத்தையும் அபகரிக்க சதி செய்வதாகப் பிரச்சாரம் செய்யும். கிறித்தவர்களும் முசுலீம்களும் இந்துமதத்தை இழிவுபடுத்துவதற்காகத்தான் இவர்களைத் தூண்டிவிடுகிறார்கள் என்று கூசாமல் புளுகும்.

மொத்தத்தில் கிரிமினல் ஜெயேந்திரருக்கு மக்கள் ஆதரவைத் திரட்ட முடியாத காரணத்தால் வெறி பிடித்த நாயின் நிலையில் இருக்கிறது பார்ப்பனப் பாசிச ஆர்.எஸ்.எஸ். கும்பல். வெறி நாய்களைச் சொல்லித் திருத்த முடியாது.

போராட்டம்தான் இதற்கு விடை. "வழக்கை போலீசு விசாரிக்கும், தண்டனை வழங்கும்" என்று நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சங்கரராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டிருக்கும் ஜெயேந்திரர் என்ற குற்றவாளி, இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு எதிரான பார்ப்பனப் பாசிசக் கும்பலின் தலைவன். எனவே இந்தக் கொலை வழக்கில் ஜெயேந்திரர் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் நேர்மையுணர்ச்சி கொண்ட ஒவ்வொருவரும் அக்கறை காட்ட வேண்டும்.

ஜெயேந்திரரால் ஏமாற்றப்பட்டிருப்பவர்கள் நாத்திகர்களல்லர்; இறை நம்பிக்கை கொண்ட பக்தர்கள். காவி உடையணிந்த ஒரு கிரிமினலை ஆன்மீகத் தலைவரென்று நம்பி அவர் காலில் விழுந்த ஒவ்வொருவரும் ஜெயேந்திரரால் அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கிரிமினல் தண்டிக்கப்படவேண்டுமெனக் கோருவது பெரும்பான்மை இந்துக்களின் கடமை.

மடங்கள், ஆதீனங்கள் என்ற பெயர்களில் மக்களின் துயரத்தைக் காசாக்கிக் கொள்ளும் இத்தகைய கிரிமினல்களை ஒழித்துக் கட்டவேண்டுமானால் ஜெயேந்திரர் தண்டிக்கப்பட்டாக வேண்டும்.

ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டதைச் சாக்காகக் கொண்டு பார்ப்பன மத வெறியைப் பரப்பவும், தமிழகத்தை குஜராத் ஆக்கவும் சதி செய்கிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல். இச்சதியை முறியடிக்க இறைநம்பிக்கை கொண்ட மக்களும், பெரியாரின் தொண்டர்களும், ஜனநாயகவாதிகளும், கம்யூனிஸ்டுப் புரட்சியாளர்களும் இணைந்து போராடுவோம்!

**(ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. - பு.மா.இ.மு. - வி.வி.மு. இணைந்து வெளியிட்டுள்ள "பார்ப்பன பயங்கரவாதிகளின் கூடாரமே சங்கரமடம்" என்ற சிறு நூலில் இருந்து...)**


படிப்பகம்

www.padippakam.com

# "காம கே[ா]டி பீடம்!"

காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமனைக் கூலிப் படையை வைத்து காஞ்சி சங்கரமட பீடாதிபதி ஜெயேந்திரன் படுகொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. சோமசேகர கணபாடிகள் என்ற பெயரில் சங்கரராமன், ஜெயேந்திரனுக்கு தொடர்ந்து பல கடிதங்கள் எழுதி வந்ததாகவும், அவற்றில் ஜெயேந்திரனும் விஜயேந்திரனும் சங்கரமடத்தில் பல்வேறு ஒழுக்கக் கேடுகள் - முறைகேடுகளில் ஈடுபட்டு, மடத்தின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதால் அவற்றை அம்பலப்படுத்தப் போவதாக மிரட்டியதாகவும், அதனால் ஜெயேந்திரன் ஆத்திரமுற்று சங்கரராமனைக் கொலை செய்து விட்டார் என்றும் கூறப்படுகிறது. இந்தக் கடிதங்கள் பற்றி பல்வேறு பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. அதே சமயம், சங்கரராமன் மீது உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், அவர் மிரட்டிப் பணம் பறிப்பவராகவும் அதை வைத்து நாக்குக்கு ருசியாகச் சாப்பிட்டு மகிழும் சாப்பாட்டு ராமனாகவும் குடும்ப பொறுப்பற்றவர் என்பதாகவும் ''ஜூனியர் விகடன்'' போன்ற ஏடுகள் கருத்துப் பரப்ப எத்தணிக்கின்றன. இதன் மூலம் ஜெயேந்திரனின் குற்றம் ஒன்றும் பெரியதல்ல என்பதைப் போன்ற தோற்றத்தை உருவாக்குகிறார்கள்.

சங்கரராமன் கொலை செய்யப்படுவதற்கு முன்பு அவர் பெயரில் எழுதப்பட்ட இரண்டு கடிதங்கள் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. இவற்றைப் பரிசீலிக்கும் போது நமக்கு சில சந்தேகங்கள் எழுகின்றன. ஜெயேந்திரன் மற்றும் விஜயேந்திரன் புரிந்து வந்த அட்டூழியங்கள் குறித்து கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பல கடிதங்களும் சங்கரமட சீடர்கள், விசுவாசிகள், ஆதரவாளர்கள் மத்தியில் சுற்றுக்கு விடப்பட்டிருக்கின்றன. சோமசேகர கணபாடிகள், கிருஷ்ணஸர்ப்பம் மற்றும் சங்கரராமன் பெயர்களில் அவை எழுதப்பட்டிருக்கின்றன. கொலை செய்யப்பட்ட சங்கரராமன் அல்லது தாக்கப்பட்ட சென்னை ராதாகிருஷ்ணன் ஆகியோர்தான் வெவ்வேறு பெயர்களில் இப்படி கடிதங்கள் எழுதினர் என்று கூறப்படுகின்றன.

சங்கரராமன் தற்போது கொலை செய்யப்பட்டு விட்டார். அவர் உயிருடன் இருந்தவரை அவர் கூறிய குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க சங்கரமடம் முன் வரவில்லை. அவர் உயிருடன் இருந்தவரை அவருக்கும் மடத்திற்கும் மட்டுமே தெரிந்த மர்மமாக இருந்த இந்தக் கடிதங்கள் இப்போது வெளியே வந்துவிட்டன. இக்கடிதங்களில் கூறப்படும் குற்றச்சாட்டு ஒவ்வொன்றின் மீதும் விசாரணை நடத்தி நாம் உண்மையைக் கண்டறிவது சாத்தியமற்றது. இவற்றை வெளியிடுவதற்கு அத்தகைய விசாரணை தேவையுமற்றது.

இவ்வாறு நாம் கருதக் காரணம் சங்கரமடத்தின் மீது நாம் கொண்டிருக்கும் வெறுப்பு அல்ல; நம் கண் முன்னே தெரியும் சில உண்மைகள்.

1. கைது செய்யப்படுவதற்கு சில வாரங்கள் முன் நக்கீரன் நிருபரை அழைத்து ஜெயேந்திரனே கொடுத்த பேட்டியில், ''சங்கரராமன் கடிதங்களால் அவர் தூக்கம் வராமல் தவித்ததாகவும், கடிதங்களை வைத்திருந்தால் வம்பு என்று அவற்றை எரித்து விட்டதாகவும்'' கூறுகிறார். விஜயேந்திரரின் தம்பி ரகு பெண்களுடன் அடிக்கும் கொட்டத்தை ஒப்புக் கொண்டதுடன், அவரை மடத்தை விட்டு விரட்டிவிட்டதாகவும் கூறுகிறார்.

2. ஜெயேந்திரர் கைதுக்குப் பின் எழுத்தாளர் அனுராதா ரமணன் தொலைக்காட்சிக்கும் குங்குமம் இதழுக்கும் அளித்துள்ள பேட்டியில் தான் ஜெயேந்திரரால் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டதை உறுதி செய்கிறார். ஜெயேந்திரர் மீதான நடவடிக்கை ''தெய்வம் நின்று கொல்லும் என்பதை நிரூபித்திருக்கிறது'' என்று சொல்லி மகிழ்ச்சி தெரிவிக்கிறார்.

3. காஞ்சிபுரம் மக்கள் மத்தியில், குறிப்பாக காஞ்சி மடம் அமைந்துள்ள வீதியில் நாங்கள் நடத்திய விசாரணையில் கொலை விசயம் பற்றித்தான் மக்கள் ஆத்திரம் பொங்கப் பேசினார்கள். பாலியல் முறைகேடுகள் பற்றிக் கேட்டபோது, ''இதெல்லாம் உங்களுக்கு இப்பத்தான் தெரியுமா?'' என்று ஏளனம் செய்தார்கள். ''இதுக்கு சி.பி.ஐ. விசாரணையா போடணும்? வீடியோ கடைக்காரன இட்டாந்து விசாரிக்கச் சொல்லுங்க சார். மடத்துல என்னென்ன காசெட் வாங்கிப் பாத்தாங்கன்னு அவன் சொல்லிட்டுப் போறான்'' என்றார் ஒருவர்.

4. இறுதியாக காஞ்சி மடத்தில் மர்மமான முறையில் இறந்த பெண்கள், மற்றும் பாலியல் சார்ந்த குற்றங்களை விசாரிக்க தமிழக அரசு பெண் போலீசு அதிகாரிகள் கொண்ட ஒரு விசாரணைக் குழுவையே அமைத்திருக்கிறது.

இவை மறுக்கவியலாத உண்மைகள்.

இந்தக் கடிதங்களை எழுதியவர்கள் மூவரோ, ஒரே நபரோ. ஆனால், அவற்றில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டுகள் மறுக்க முடியாதவை. அப்படிப்பட்ட கடிதங்களில் சில புதிய ஜனநாயகம் ஏட்டிற்கு கிடைத்தன. அவற்றில் இரண்டு கடிதங்களை இங்கே வெளியிடுகிறோம்.

சங்கரராமன் பார்ப்பன சனாதன ஆச்சாரத்தைப் பற்றியொழுகவே போராடியிருக்கிறார் என்றாலும், அவரின் கடிதங்கள் சங்கரமடத்தின் ஒழுக்கக்கேடுகள், முறைகேடுகளை அம்பலப்படுத்துவதால் இதை நாம் வெளியிடுகிறோம்.

ஜெயேந்திரன்தான் அயோக்கியன் என்பதைப் போலவும் விஜயேந்திரன் யோக்கியமானவன் என்பதைப் போலவும் ஒரு தோற்றத்தை உருவாக்கி, விஜயேந்திரனை வைத்து சங்கரமடத்தின் 'புனிதத்தை'

www.padippakam.com

புதுப்பிக்கும் முயற்சியில் சில 'பெரிய மனிதர்கள்' தற்போது ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால், இக்கடிதங்கள் விஜயேந்திரனுக்கும் சங்கரமட அயோக்கியத்தனங்களில் பங்கிருப்பதை அம்பலப்படுத்துகின்றன.

இக்கடிதங்களில் காணப்படும் வடமொழிச் சொற்களை வாசகர்கள் புரிந்து கொள்வதற்காக, அச்சொற்களின் பொருளை அடைப்புக் குறிக்குள் கொடுத்திருக்கிறோம்.

# I

ஸ்ரீ காஞ்சி சங்கரமடத்தின் சிஷ்யர்கள், விசுவாசிகள், அபிமானிகள் அனைவருக்கும் ஜம்புகேஸ்வரவாசி சோமசேகர கணபாடிகள் அனந்தகோடி வந்தனங்கள்!

தற்போது ஸ்ரீ சங்கரமடத்தில் வாஸம் செய்து வரும் ''இரு மஹனீயர்கள்'' (பெருமக்கள்) பற்றியும் பொதுவாக குறிப்பிட்டு நான் ஜெயேந்திரருக்கு எழுதிய கடிதத்தின் நகல்களை உங்களில் பலர் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த மடம் சீரழிந்து போவதை 10 வருஷமாக பார்த்துக் கொண்டிருக்கும் ஏழை ப்ராம்மணன் நான். என்னால் என்ன செய்ய முடியும். என் வயிறு பற்றி எரிகிறது. இரு ஸ்வாமிகளும் சேர்ந்து இந்த மடத்தை இப்படி சீரழிய செய்து விட்டார்களே. என் கடிதத்தை பார்த்து ஒரு சிஷ்யனுக்காவது, அபிமானிக்காவது உள்ளம் பதைபதைத்து, ஜெயேந்திரரிடம் எடுத்துச் சொல்ல மாட்டார்களா என்று ஏங்கினேன். கடிதம் அனுப்பிவிட்டு காஞ்சிபுரத்தில் தான் இருந்தேன். மடத்தில் நடக்கும் விஷயங்களை கூர்மையாக கவனித்தேன். ஜெயேந்திரர் என்னை அழிக்க அபிசாரஹோமம் நடத்தினார். அதுவும் ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவாள் இருந்த இடத்திலேயே. நான், அழியத் தயாராக இருக்கிறேன். அதுவும் இந்த மடத்துக்கு தொண்டு செய்யும்போது நேர்ந்தால் மிக பாக்யம். எனக்கு கிடைக்கப் போகும் நல்ல கதி, இரு சுவாமிகளுக்கும் நிச்சயமாய் கிடைக்காது. மடத்தையும், மதத்தையும் சீரழித்ததற்காகவும், ஆச்ரம தர்ம விருத்த (துறவு நெறிக்கு எதிராக) காரியங்களை முழு ஞானத்துடன், திமிருடன், அகங்காரத்துடன் பயமில்லாமலும் செய்த மஹா பாபத்திற்காகவும் கல்பாந்தம் (ஏழேழு பிறவிகளுக்கும்) கொடூரமான நரகத்தில் தண்டனை அனுபவிப்பார்கள். என்ன கொடுமையடா. ஒருவர் கூட இவர்களை தட்டிக் கேட்கவில்லையே. ஆகையால் நான் அழிந்து போகும் முன் இந்த இரண்டு சுவாமிகள் நடத்திய காம லீலைகளை விஸ்தாரமாக எழுதி, முடிந்தால் புஸ்தகமாக வெளியிட இருக்கிறேன். இதற்கு பல வருடங்களாக உதவிய பாணாம்பேட்டை குப்பு, கண்ணன், நாகங்குடிவைத்தா, பாட்னா முரளி, மதராஸ் ராதா, கும்பகோணம் பட்டாபி, திருவிடைமருதூர் சந்திரா, தாம்பரம் சகோதரர்கள், பாலு மற்றும் இரு சுவாமிகளிடம் தற்போது கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும சிலர் ஆகியோருக்கு மிகவும் கடமைப்பட்டு இருக்கிறேன். பாட்னா முரளி செய்த சேவை மிகவும் முக்கியமானது. அவனுக்கு நல்ல கதி கிடைக்க வேண்டும் என்று பகவானை பிரார்த்திக்கிறேன். இதை படித்த பிறகாவது, மடத்து சிஷ்யர்களுக்கும், அபிமானிகளுக்கும் நல்ல எண்ணம் கொண்டவர்களுக்கு சிறிதாவது ரோஷம் வந்து மடத்தை காப்பாற்ற பிரயத்தனம் (முயற்சி) செய்தால் அதுவே போதும். குமுறிக் கொண்டு அதிஷ்டானத்தில் வாஸம் (கல்லறையில் உறங்கும்) செய்யும் ஸ்ரீ ஸ்ரீ பெரியவாள் சந்தோஷபடுவார்கள். இந்த பாதகர்களை விரட்டியடித்து மடத்தை காப்பாற்றி வேறு நல்ல குரு நமக்கு கிடைப்பார் என்பதில் சந்தேகமில்லை. இவருக்கு 50-வது பீடாரோஹண வைபவம் (துறவறத்திற்குப் பொன்விழா) ஒரு கேடா. சூடு சொரணை உள்ளவராயின் இந்த நகலைப் படித்த பிறகு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகவேண்டும்.

தற்போது பீடாதிபதிகளே மற்றும் அவரது ''அந்தேவாசி'' இளயவரின் லீலைகளை விஸ்தாரமாகவே ஆதாரங்களுடனும் ''மஹனீயர்களின் மஹாத்மியம் சரித்ரம்'' (பெருமக்களின் ஒளி வீசும் வரலாறு) என்ற தலைப்பில் தொடர்ந்து எழுத உத்தேசித்திருக்கிறேன். இந்த ''மஹாத்மாக்களின்'' லீலைகளை விஸ்த்தாரமாக விவரிப்பதென்பது அஸாத்யமான கார்யம்தான். புண்ய புருஷரான ஜெயேந்திரரே தான் 62 சுவாசினிகளை (இளம் கன்னிகளை) இன்பம் அனுபவித்திருப்பதாக வெளிப்படையாகவே வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். அத்தகையவரின் சரித்திரத்தை விஸ்தரிப்பது என்பது ''அடையபலம் ராமகிருஷ்ண தீட்சிதர்'' போன்ற மஹாவித்வான்களுக்கு மட்டும் சாத்யமான கார்யம். ஏதோ என்னால் முடிந்த வரை எழுதியிருக்கிறேன். இனி தொடர்ந்து வெளிவரும். இந்த தொடரில் வரப்போகும் அத்யாய விபரங்களை சங்ரஹமாக (சுருக்கமாக) தற்போது தெரிவிக்கிறேன்.

1. ஆஸ்ரமஸ்விகரணம் ஆன (துறவறம் பூண்ட) சில மாதங்களிலேயே பிரதானமாக, வாநகரம், மற்ற முகாம்கள் இவைகளில் நடந்த பால ஸ்தீரீ லீலைகள் (உபயம்: நாகங்குடி வைத்தா)

2. வேதபுரி மூலம் ''தங்கத்திடம் வெள்ளி கேட்டபிச்சை'' அதிசுவாரஸ்யமான அத்யாயம் (உபயம்: தகவல் ஆதாரம் நா. வைத்தா)

3. இளையாத்தங்குடியில் ஸ்ரீ ராமசாமி சர்மா சாட்சியாக கொட்டாயில் அடித்த கொட்டங்கள்.

4. கும்பகோணம் பட்டாபிக்கு பாங்க் விசுவநாதன் பார்யை (மனைவி) விஜயாவுடன் நிர்வாண ஆலிங்கனம் செய்தகோலத்தில் திவ்ய தரிசனம் கொடுத்த விவரமான அத்தியாயம் - பதிலுக்கு காமாஷி கல்யாண மண்டபம் - மடம் வாசலில் விஜயாவுக்கு கடை கொடுத்த கருணை.

5. குண்டூர் காமாஷி பீடமாமிக்கு பரமானுக்ரஹம் செய்து (அருள் பாவித்து) வைத்த நிர்வாண நவாவர்ண வைபவம் (நிர்வாண பூஜை).

6. தென்னாலியில் நரகசதுர்தசி புண்ய காலத்தில், அதிகாலையில் (ஸ்ரீ ஸ்ரீ பரமாசார்யாள் பூஜை செய்து கொண்டிருந்த சமயம்) ஆந்திர சுவாசினிகளுடன் சல்லாப சங்கமம் (பாணாம்பேட்டை கண்ணன் நாகங்குடி வைத்தா இவர்களால் பந்தனம் செய்யப்பட்டது).

சங்கரராமன்



7. விஜயா வாடாவில் திருவண்ணாமலை ராமுவஷசாஸ்திரிகளுடன் ஓடியது; மார்கழி மாதம் அதிகாலை. இதுவரை வெளிவராத புதிய விஷயங்கள் (உபயம்: பாணாம்பேட்டை குப்பு).

8. குருவாயூர் க்ஷேத்திரத்தில் (திருத்தலம்) குருநாதர் வனஜாவுடன் செய்த லீலா வினோதங்கள். தம்பிக்கும் பங்கு (உபயம்: பாட்னா முரளி).

9. திருப்பதி மாமியுடன் தான் அனுபவித்து விட்டு தாடி நடராஜனையும் அனுபவிக்குமாறு பரமானுக்கரஹம் (அருள் பாலித்தல்)


படிப்பகம்

www.padippakam.com

செய்த பிறகு அவனுக்கு கல்தா கொடுத்த அத்யாயம் (உபயம்: ராமமூர்த்திபாட்டு).

10. எத்திராஜ் முதலியாரின் ''உப-பத்னி'' (வைப்பாட்டி) ஸ்தானத்தில் இருந்த மைதிலியுடன் நடத்திய சரச சல்லாப லீலைகள் சரித்திரம்.

11. நட்சத்திர பேர் கொண்ட பத்திரிக்கை அம்மாவுடன் நடத்திய லீலைகள், அதனால் ஏற்பட்ட சிக்கல்கள், சரணாகதி, வாக்குவாதம், த்ரவ்ய நஷ்டம் (பண நட்டம்) ஆகிய விபரங்கள் அடங்கிய விசேஷ அத்யாயம்.

12. அனந்தா பிக்சர்ஸ் மாமியுடனும், ஆலங்காடு நவி சம்சாரத்துடனும் பெற்ற ஆனந்த லீலைகள் அத்யாயம் (உபயம்: பாட்னா முரளி).

13. பான்பராக்கு தாண்டவ பத்னியை, தொடர்ந்து தற்பொழுது கூட அருகில் வைத்துக் கொண்டு நடத்திவரும் சரச சல்லாப அத்யாயம் (உபயம்: தாம்பரம் பாபு).

14. புதுக்கோட்டை திவான் பயிஷ்கார் மாட்டுப்பெண் (மருமகள்) தாம்பரம் பேபி (எ) ஜெயலஷ்மியுடன் அடித்த மோஹ லீலைகள் அத்யாயம் (உப. தா. பாக்கம் தியாகராஜர்).

15. கூடவே இருக்கும் தாம்பரம் சகோதரர்களின் சகோதரிக்கு விவாஹம் செய்வித்து திவ்யானுக்ரஹம் அடைய விடாமல் (முதலிரவுக்கு முன்னரே) ஜெயேந்திரரும் நட்ட காலனும் (திரிசூலம்) அனுபவித்த அத்யாயங்கள் (உபயம்: தாம்பரம் பாபு).

குறிப்பு: இதன் பலன் நட்டகாலன் தன் ஒரே பிள்ளையையும் பறிகொடுத்து விட்டு தானும் போய் சேர்ந்தான்.

16. காமகோடி லீலா உடனும் அவளால் அறிமுகம் செய்யப்பட்ட இளசுகளுடனும் விதவிதமான லீலா சரச சல்லாப அத்யாயம் (உபயம்: திருவிடை மருதூர் சந்திரா, பெ. வாழ்ந்தாள் மௌலி).

17. சேலம் சுந்தரானு அய்யர் பார்யாவுடன் பலகாலமாக இன்னும் நடத்தி வரும் கோலாகால லீலைகள் (உபயம்: பாட்னா முரளி).

18. பாங்க் விதவை சரோஜா, (மற்றும்) அவள் பெண்களுடன் நடத்திய சரச சல்லாபம். பெண்களுக்கு கல்யாணம் செய்துவைத்து திவ்யானுக்ரஹம் (முதலிரவுக்கு முன்னரே) செய்த அத்தியாயம் (உபயம்: பாட்னா முரளி).

மேலே குறிப்பிட்ட அத்யாயங்கள் தவிர

1. விசேஷ அனுபந்தங்கள்

2. அந்தே வாசியின் பொன்பாடி லீலைகள்

கோயில் ராமு குடும்பத்து ஸ்திரிகளுடன் (பெண்களுடன்) தொடர்ந்து அடித்து வரும் கூத்துக்கள். ஸ்திரிகள் விடுதியில் நடைபெறும் விபசாரங்கள் ஆகிய விஷயங்களும் இணைப்புகளாக வெளிவரும். இதில் முக்யபங்கு (விஜயேந்திரனின்) தம்பி ரகுவிற்கு.

குருநாதர் நடத்திய லீலைகள் பற்றிய புகைப்படங்கள், ஆடியோ, வீடியோ கேசட் பதிவுகள், கைப்பட எழுதிய கடிதங்களின் நகல்கள் இவைகளை கொடுத்துதவிய ''சென்னை ராதா'' மற்றும் ''நா.குடி வைத்தா'' இவர்களுக்கும் என்னுடைய கிருத்க்ஞையை (நன்றியை) இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைபட்டிருக்கிறேன்.



ஜெயேந்திரன், விஜயேந்திரன்: மன்மத ராசாக்கள்.

வரப்போகும் அத்யாயங்களை தாங்கள் படிப்பதுடன் ப்ரதிகள் எடுத்து மற்றவர்களுக்கும் அனுப்பி வைத்து குருநாதர்களின் மகத்துவங்களை பலரும் அறிய சகாயம் செய்து ''ஸ்ரீ சந்த்ரமௌலீஸ்வரர்'' அனுக்ரஹத்தால் காம-மோஹ விவகாரங்களிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு பரமக்ஷேமத்தை அடைய ப்ரார்த்திக்கிறேன். ஈசுவரோரக்ஷது (கடவுள் காப்பாற்றுவாராக).

இந்த உண்மைகளை தெரிந்து கொண்ட பிறகும் பீடத்தின் சிஷ்யர்களும், அபிமானிகளும், பக்தர்களும் தொடர்ந்து த்ரவ்யன்களை அள்ளிக் கொடுத்தும், பீடா ரோஹண விழாக்களிலும் பங்கு கொண்டு சம்பந்தப்பட்டால் அது அவர்களுடைய துர்பாக்கியம்தான். இந்த பீடத்தின் அழிவுக்கு செய்யும் கைங்கர்யமாகும். துணிச்சலுடன் இந்த காமாந்த பீடைகளை (காமவெறிப் பிடித்தவர்களை) விரட்டி அடித்தால் மடம் உருப்பட்டு, நமக்கு நல்ல குரு கிடைப்பார்.

சோமசேகர கனபாடிகள்
06.09.2002 ஜம்புகேச்வர க்ஷேத்திரம்.

## II

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 69-வது பீடாதிபதியாக தற்சமயம் கார்யங்கள் செய்து வரும் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளுக்கு ஜம்புகேச்வர க்ஷேத்ரவாசியான (திருவானைக்காவலைச் சேர்ந்த) சோமேஸ்வர கணபாடிகள் எழுதிக் கொள்வது.

ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவாளின் பரமானுக்ரஹத்தால் அத்யைனம் செய்து ஆசார அனுஷ்டானங்களை விடாமல் அனுசரித்து சாமான்ய ஜீவனம் செய்து கொண்டு வாழ்ந்து வரும் ஒரு சாதாரண ப்ரும்மணன் நான். (இறந்து போன சங்கராச்சாரியால் பயிற்றுவிக்கப்பட்டு, அவர் ஆசியுடன், நெறிமுறை பிறழாமல் வாழ்ந்துவரும் பிராமணன் நான்.)

சமீபத்தில் திராவிட கட்சியினர் தங்களைப் பற்றியும் தங்கள் வாரிசான சங்கர விஜயேந்திரனைப் பற்றியும் விமர்சனம் செய்து வெளியிட்டுள்ள நோட்டீசை படிக்க நேர்ந்தது.

அதில் தாங்களும் தங்கள் வாரிசும் சனாதனவர்ணாச்ரம தர்மங்களை காப்பாற்ற பாடுபட்டு வருவதாக எழுதியிருக்கிறது.

அது மிகவும் அபத்தமான அபிப்ராயம். சாக்ஷாத் பரமேச்வரனே ஸ்ரீ சங்கரபகவத் பாதாளாய் அவதாரம் செய்து (அந்த

www.padippakam.com



துறவி விஜயேந்திரனின் பெற்றோர் வசிக்கும் சென்னையிலுள்ள சொகுசு பங்களா.

சிவபெருமானே ஆதிசங்கரராய் அவதரித்து) ஸத்யமான அத்வைதத் தத்துவத்தை ஸ்தாபனம் செய்து அதற்கு மூலாதாரமான வேதங்களையும் உபநிஷத்துக்களையும் இதிஹாஸ புராணங்களையும் ரக்ஷிப்பதற்காக (பாதுகாப்பதற்காக) நான்கு மடங்களை ஸ்தாபித்த மூலாம்னாய பீடமாக காமகோடி பீடத்தை ஏற்படுத்தி தானே அதன் முதல் பீடாதிபதியாக அமர்ந்து அனுக்ரஹித்தார்.

அது முதல் 'வாழையடி வாழையாக' நடமாடும் தெய்வமாக நம் எல்லோரையும் ரக்ஷித்து வந்த ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவாள் காலம் வரை பல மகான்கள் காம கோடி பீடத்தை அலங்கரித்து ''வேத தர்ம சாஸ்த்ர பரிபாலனம்'' செய்து வந்திருக்கிறார்கள்.

தாங்கள் பீடாதிபத்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகுதான் - தாங்கள் வாரிசு நியமனம் செய்த பிறகு தான் ''மிகவும் மகோன்னதமாக இருந்து காமகோடி பீடம் இன்று எல்லா வகையிலும் தாழ்ந்து போய் மிகவும் கேவலமான ஸ்திதியை'' (நிலையை) அடைந்து விட்டது. இருவரும் சேர்ந்து சர்வ நாசம் செய்து விட்டீர்கள்.

1. திராவிட கட்சி நோட்டீஸில் குறிப்பிட்டுள்ளது போல டாம்பீக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு போக போக்யங்களை அனுபவித்து வருகிறீர்கள்.

2. ஆசாரம் (ஒழுக்கம்) இல்லாமல் அனுஷ்டானம் (நடைமுறை) கிடையாது. உங்கள் இருவரிடமே இரண்டும் இல்லை. சாஸ்த்ர ஞானமும் இல்லை. வேதாந்த விசாரம் செய்யும் வழக்கம் இல்லை.

தாங்களாவது சாதுர்மாஸ்ய வ்ரத காலத்தில் தினம் ஒரு மணி நேரம் பாஷ்ய பாடம் (வேதங்களுக்கானப் பொழிப்புரை) படிப்பதாக பாவனை செய்கிறீர்கள்.

தாங்கள் வாரிசோ அந்த நேரத்தில் தூங்கிக் கொண்டிருப்பார். இல்லாவிட்டால் சிறு வயது (கல்யாணம் ஆகாத) பெண்களுடன் பேசிக் கொண்டிருப்பார்.

ஸ்ரீ சந்திர மௌளீச்வர பூஜையையும் ச்ரத்தையாக (பொறுப்புடன்) செய்வது கிடையாது. கடனே என்றுதான் செய்து கொண்டு வருகிறீர்கள். அதையும் விட்டு விட்டு ''பூஜை செய்வதற்கு மட்டும்'' ப்ரத்யேகமாக ஒருவரை நியமனம் செய்து விட்டு (வேலைக்கு ஆள் போட்டுவிட்டு) தாங்கள் ''உலகம் சுற்றப் போவதாகவும்'' தங்களின் வாரிசு ''ஊர் சுற்ற போவதாகவும்'' பேசிக் கொள்கிறார்கள்.

வேத சாஸ்த்ர பாடசாலைகள் நடத்துவதுதான் ஸ்ரீ மடத்தின் ப்ரதான கார்யம். ஆனால் தங்களுக்கும் தங்கள் வாரிசுக்கும் ''வேத தர்ம சாஸ்த்ர சனாத சம்ப்ரதாய பரிபாலனத்தில்'' அறவே நம்பிக்கை இல்லை. அதனால்தான் பள்ளிக்கூடங்கள், காலேஜ்கள், பெண்கள் ஹாஸ்டல் இவைகளை நடத்தி கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கிறீர்கள்.

அந்த ஸ்தாபனங்களில் அதர்மமான - ஆபாசமான கார்யங்கள் நடைபெற வழி செய்திருக்கிறீர்கள்.

இந்த மாதிரி கார்யங்களை சங்கராச்சார்யர்கள் செய்யலாமா?

5. யதிகள் ஏகாந்தமாக (முனிவர்கள் தனிமையில்) இருந்து கொண்டு ஆத்ம விசாரம் (சுயபரிசோதனை) செய்வார்கள். நீங்கள் இருவரும் செய்வது என்ன?

ஏஸி வசதி செய்து கொண்டு ரூம் கதவுகளையும் சாத்திக் கொண்டு ''ஏகாந்தமாக'' எல்லா வயதிலும் எல்லா வர்ணத்திலும் உள்ள பெண்களுடனும் [பைஷ்டையான ஸ்த்ரீகள் (மாதவிலக்கான பெண்கள்) உள்பட] என்ன விசாரம் (ஸ்டோரி டிஸ்கஷன்) செய்கிறீர்கள். தங்கள் வாரிசோ சினிமாவில் ஆபாசமாக நக்னமாக (அரை அம்மணமாக) நடிக்கும் நடிகைகளுடன் ''ஏகாந்தமாக சாஸ்த்ர(!) விசாரம் செய்கிறார்.

6. குடும்ப பாசத்தை விட்டவர்கள்தானே சந்யாசிகள். நீங்கள் அப்படியா இருக்கிறீர்கள். அப்படி இருந்திருந்தால் உங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் கோடிக்கணக்கில் சொத்துக்களை சேர்த்திருக்க முடியுமா?

தங்கள் தகப்பனார் மகா தேவய்யர் சாதாரண உத்யோகம் பார்த்தவர்தான்.

தங்கள் தம்பி விசு, பெரிய படிப்பாளியோ பெரிய உத்யோகம் பார்த்தவரோ இல்லை. ஆனால் திருவான்மியூர், அடையார் போன்ற இடங்களில் பெரிய பெரிய பங்களாக்களை வாங்க அவரால் எப்படி முடிந்தது?

கோடிக்கணக்கில் பணம் எப்படி சேர்க்க முடிந்தது?

தங்கள் வாரிசின் குடும்பமும் சாதாரண வைதீக குடும்பம் தான். குறுகிய காலத்திலேயே அவருடைய சகோதரர்கள் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்து விட்டார்கள்.

அதிலும் அவருடைய இளைய தம்பி ரகு மஹா வியாபகன் (பலே கில்லாடி).

எப்பொழுதும் அவனைச் சுற்றி பெண்கள்தான்.

அவன் இடுப்பை சுற்றி பல கலர்களில் செல்போன்கள்.

ஒன்று காதில் இருக்கும். ஒன்று கையில் கத்திக் கொண்டு இருக்கும். வெளியில் போனால் சொகுசான கார்ல செல்வான்!

வெளியூர் போனால் விமானத்தில் பறப்பான். அவனுடைய கருணையால் கோவில் ராமு பல வீடுகளை வாங்கி விட்டான். அவன் வீட்டு பெண்கள் லட்சக்கணக்கில் ஆபரணங்களையும் சொத்துக்களையும் வாங்கி விட்டார்கள்! தம்பிகள் ''விசு - ரகு'' இவர்கள் தயவில் அந்தப்புரத்து மாமிகள் அனுபவிக்கிறார்கள்.

7. பெரிய தலைவர்கள், ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் அனைவரும் ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவாளின் தரிசனத்திற்காக காத்திருப்பார்கள். பல சந்தர்ப்பங்களில் தரிசனம் செய்ய முடியாமல் திரும்பி கூட போயிருக்கிறார்கள். இன்றைய நிலைமை என்ன? நீங்கள் இருவரும் அவர்களை தரிசிக்க காத்திருக்கிறீர்கள். போன் செய்து கெஞ்சியும் வேண்டியவர்கள் மூலம் மன்றாடியும் வரவழைக்கிறீர்கள். நம் மடத்தின் கௌரவம் இப்படி ஆக வேண்டுமா?

8. ''தாய் எட்டி பாய்ந்தால் குட்டி எட்டடி பாயும்'' என்று சொல்வார்கள். அதேபோல் தங்கள் அந்தே வாஸியும் (விஜயேந்திரனும்) தங்களை எல்லாவிதத்திலும் மிஞ்சி விட்டார். கோவில் ராமு குடும்ப போஷணம் (பராமரிப்பு) ஒன்று தான்

தொடர்ச்சி 16-ஆம் பக்கம்

www.padippakam.com

# ஜெயேந்திரன் கைது: எதிர்க்கட்சிகளின் மௌனம் — மர்மம் என்ன?

''**ஜெ**யேந்திரரை ஜெயலலிதா கைது செய்தது ஏன்?'' என்ற புதிருக்கு விடை காண, 'பிரம்ம இரகசியத்தை' அறிய முயலும் அஞ்ஞானியைப் போல புலனாய்வு இதழ்கள் ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு நம்பத்தக்க வதந்தியை உண்மையாக நிலைநாட்ட முயன்று வருகின்றன.

''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' என்ற கொள்கையைத் தனது அரசு எப்போதுமே கடைப்பிடித்து வருவதாகவும், குப்பனும் சுப்பனும் கைது செய்யப்படுவதைப் போலத்தான் ஜெயேந்திரரும் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்றும் ஜெயலலிதா கூறுவதை புரட்சித் தலைவியின் பொற்பாதங்களில் வீழ்ந்து கிடக்கும் அடிமையால் கூட அப்படியே நம்பமுடியாது என்பது உண்மைதான். இதுவரை நாம் அறியமுடியாத ஏதோவொரு உள்நோக்கம் காரணமாகத்தான் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஜெயேந்திரரைக் கைது செய்ய ஜெ. உத்தரவிட்டிருக்கிறார் என்றே இருக்கட்டும். அவாளை இவாள் ஏன் கைது செய்தார் என்பது ஆர்.எஸ்.எஸ். அம்பிகள் கவலைப்பட வேண்டிய விசயம். ஒரு உள்நோக்கத்தைக் கண்டுபிடித்துக் கூறுவதன் மூலம் தான் ஜெயேந்திரர் நிரபராதி என்று அவர்களால் நிறுவ முடியும்.

எனவே, **ஜெயலலிதாவின் நடவடிக்கைக்கு என்ன உள்நோக்கம்** என்று ஆராய்வதைக் காட்டிலும், எதிர்க்கட்சிகள் என்று தம்மை அழைத்துக் கொள்வோரின் மர்மமான **மவுனத்திற்கு என்ன உள்நோக்கம்** என்பதை ஆராய்வது அரசியல் நோக்கில் அவசியமானது.

தன்னுடைய வாழ்நாள் முழுதும் சங்கர மடம் எனும் பார்ப்பனக் கோட்டையை எதிர்த்துத் தொடர்ந்து தாக்குதல் தொடுத்தார் பெரியார். இன்று அந்த சங்கராச்சாரியை ஒரு 'பாப்பாத்தி'யின் அரசு கைது செய்து இழுத்து வரும் போது திராவிடக் கொழுந்துகளும், சுயமரியாதை சூரப்புலிகளும் பாராட்டினார்கள், கைதட்டினார்கள் அல்லது வாய் பிளந்தார்கள். ஆனால், மேற்சொன்ன இந்த 'நடவடிக்கைகளுக்கு' மேல் எதுவும் செய்துவிடக் கூடாது என்பதில் மட்டும் கவனமாக இருந்திருக்கிறார்களே, அதன் உள்நோக்கம் என்ன என்பதுதான் கேள்வி.

சங்கரமடம் பார்ப்பனக் கிரிமினல்களின் கூடாரம். பார்ப்பன ஆதிக்கத்தின் சித்தாந்த, அரசியல் தலைமைப்பீடம். தாழ்த்தப்பட்டோர் ஆலைய நுழைவை எதிர்த்தது; அம்பேத்கர் இயற்றிய இந்து சட்டத் தொகுப்பை முனை மழுங்கச் செய்தது; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் உரிமையை அரசியல் சட்டத்தின் மூலமே பறித்தது; அப்படியொரு சட்டம் வந்தபோது அதை உச்ச நீதி மன்றம் மூலம் தடுத்தது போன்றவையெல்லாம் செத்துப் போன 'நல்ல' சங்கராச்சாரியின் பங்களிப்புகள்.

தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். காலூன்ற களம் அமைத்துக் கொடுத்தது, ஆர்.எஸ்.எஸ்-இன் அடியாள் படையான ''ஜன கல்யாண்'' அமைப்பை உருவாக்கி பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களிடையே கையாட்களை உருவாக்கியது, தமிழ் வழிபாடு எதிர்ப்பு, தலித் கோயில் நுழைவு எதிர்ப்பு, மதமாற்றத் தடைச் சட்டம், நாட்டார் கோயில் பூசாரிகளை பார்ப்பனமயமாக்கியது, இந்து அறநிலையத்துறையை விழுங்கியது... என ஜெயேந்திரரின் குற்றப் பட்டியல் வெகு நீளமானது. நடுநிலையாளன் போல வேடமிட்டு அயோத்தி பிரச்சினையில் நடத்திய கட்டப் பஞ்சாயத்தும், மோடிக்கு அளித்த ஆதரவும், ஊழல் வழக்குகளிலிருந்து ஜெயலலிதாவைத் தப்ப வைக்க நடத்திய புரோக்கர் லீலைகளும் இன்னொரு நீண்ட குற்றப்பட்டியல்.

ஜெயேந்திரனைக் கொலை வழக்கில் இருந்து விடுதலை செய்யக் கோரி, பா.ஜ.க. சென்னையில் நடத்திய பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் அக்கட்சியின் தலைவர் அத்வானி.




சங்கரமடத்தின் இந்த நடவடிக்கைகள் குறித்து தி.மு.க., தி.க., பா.ம.க., ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம், வலது-இடது கம்யூனிஸ்டு கட்சிகள் போன்ற அனைவரும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள்.

அதாவது, ஆன்மீகப் போர்வையில் உலவி வந்த இந்தக் கிரிமினலை அரசியல் ரீதியாக விமர்சித்து வந்திருக்கி

www.padippakam.com

றார்கள். ஆனால், இத்தகைய விமர்சனங்கள் சங்கராச்சாரியை மக்கள் மத்தியில் பெரிய அளவில் மதிப்பிழக்கச் செய்துவிடவில்லை; தனிமைப்படுத்தி விடவுமில்லை.

இன்று அந்தக் கிரிமினல், தனது 'சொந்த முயற்சியில்' தன்னைத்தானே அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறான். தனது காமலீலைகளையும் ஊழல்களையும் கேள்விக்குள்ளாக்கிய ஒரே காரணத்திற்காக சங்கரராமன் எனும் பார்ப்பனரை, 'இந்துக்கள்' புனிதமாகக் கருதும் கோயிலுக்குள்ளேயே வைத்துக் கொலை செய்திருக்கிறான் இந்த சங்கராச்சாரி. இது அன்றாடம் நிகழும் கொலைக் குற்றங்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளக் கூடிய இன்னொரு கொலைக் குற்றமல்ல; பார்ப்பனியத்தின் கொடூரமான முகத்தை மக்களிடம் முழுமையாக அம்பலப்படுத்திக் காட்டுவதற்கான எல்லா வாய்ப்புகளையும் தன்னுள் கொண்டிருக்கும் ஒரு கிரிமினல் நடவடிக்கை. பார்ப்பனியத்தின் மேன்மைகள் குறித்த பிரமைகளுக்கும், கவர்ச்சிக்கும் ஆளாக்கப்பட்டிருக்கும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை அந்த நச்சுச் சூழலிலிருந்து மீட்டெடுப்பதற்கான அரிய வாய்ப்பு.

ஜெயேந்திரர் ஒரு கொலைக் குற்றவாளி என்பதை நிரூபிப்பது நமது வேலையல்ல; அதை ஜெயலலிதா செய்யட்டும். சங்கரமடம் என்பதே ஒரு குற்றவாளிகளின் கூடாரம் என்பதை நிரூபிப்பதுதான் பார்ப்பன எதிர்ப்பாளர்கள் செய்ய வேண்டிய வேலை. இந்தக் கிரிமினல் நடவடிக்கையின் ஊற்றுக்கண்ணான பார்ப்பன பாசிச அரசியலை மக்களுக்குப் புரிய வைப்பதுதான் நமது பணி.

''சாமியார் வேடத்தில் கிரிமினலா?'' என்ற அதிர்ச்சியின் காரணமாக மக்களிடம் நிலவும் வெறுப்புக்கு அரசியல் அடித்தளமில்லை. எந்த பார்ப்பன பாசிச சித்தாந்தம் குஜராத் முசுலீம்களையும் பாதிரிகளையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் இரக்கமின்றிக் கொலை செய்யும் நெஞ்சுரத்தை இந்தக் கும்பலுக்கு அளிக்கிறதோ, அதுதான் சங்கரராமனையும் கொலை செய்ய வைத்திருக்கிறது என்பதை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

எந்த அதிகார பலமும், அரசியல் செல்வாக்கும் இப்படியொரு கொலையை மிக அலட்சியமாகச் செய்து முடிக்கும் தைரியத்தை ஜெயேந்திரருக்கு வழங்கியதோ, அந்த அரசியல் - அதிகார வலைப்பின்னலை, நூல் நூலாகப் பிரித்து மக்கள் முன் காட்டுவதுதான் பெரியார் - அம்பேத்கரின் வழித்தோன்றல்கள் என்று கூறிக் கொள்வோர் செய்ய வேண்டிய கடமை. இந்த வலைப்பின்னல்தான் பாபர் மசூதி இடிப்பு முதல் குஜராத் படுகொலை வரை, மதமாற்றத் தடைச்சட்டம் முதல் தலித் தலைவர்கள் எனப்படுவோரை விலை பேசுவது வரை, அரசு ஊழியர் மீதான ''டெஸ்மா'' முதல் அரசியல் எதிரிகள் மீது ஏவப்பட்ட ''பொடா'' வரை அனைத்தையும் பின் நின்று இயக்கியிருக்கிறது.



ஜெயேந்திரனின் விடுதலைக்காக, காஞ்சியிலுள்ள காமாட்சி அம்மன் கோவிலுக்குள்ளே ஊர்வலம் நடத்தும் ஆர்.எஸ்.எஸ். கூட்டம்: உண்மையான பக்தர்களை அவமதிக்கும் பார்ப்பனத் திமிர்.

இந்த வலைப்பின்னலையும், சங்கர மடத்தின் அதிகாரக் கட்டுமானங்களையும் சாதாரண மனிதனும் புரிந்து கொள்ளும் விதத்தில் அம்பலப்படுத்துவதுதான் நமது பணியாக இருக்க முடியும்.

ஒரு ''லாக்-அப்'' கொலை நிகழும் போது அந்தக் குறிப்பிட்ட கொலை குறித்த புலனாய்வின் வரம்பைத் தாண்டிச் சென்று, 'போலீசின் விசாரணை முறைகள், அன்றாடம் நிகழும் சித்திரவதைகள், எதற்கும் பதிலளிக்கத் தேவையில்லாத அதன் அதிகாரம், போலீசின் குற்றங்களுக்கு வழங்கப்படும் சட்டப் பாதுகாப்பு' என அந்தக் கட்டமைப்பே கொலை செய்வதற்கான அதிகாரத்தை போலீசுக்கு எப்படி வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நிரூபிப்பதே மனித உரிமை செயல்வீரர்களின் பணியாக இருக்கும்.

'சங்கரராமன் கொலை'யை ஒட்டி பார்ப்பன எதிர்ப்பாளர்கள் எனப்படுவோர் இப்படித்தான் செயல்பட்டிருக்க வேண்டும். கடப்பாரையும் புல்டோசரும் இல்லாமலேயே சங்கர மடம் எனும் கிரிமினல் கூடாரத்தை இடித்து நிரவுவதற்கான இந்த அரிய வாய்ப்பை மேற்படி கட்சியினர் பயன்படுத்திக் கொண்டார்களா என்றால், இல்லை.

இந்த மவுனத்திற்குக் காரணம் அலட்சியமோ, மெத்தனமோ அல்ல. இது காரியக்காரர்களின் மவுனம். அவர்களது அறிக்கைகளைப் பாருங்கள்.

போலீசின் நேர்மையை கருணாநிதி பாராட்டினார். பிறகு ''கங்கையே சூதகமானால்'' என்று சொல்லி காஞ்சி மடத்திற்கு புனிதம் கற்பித்தார்; ''மாலுமியை மாற்ற வேண்டும்; ஆனால், கப்பலைப் பாதுகாக்க வேண்டும்'' என்று மடத்திற்காக உருகினார். கடைசியாக ''ஜெயேந்திரர் நடத்தப்படும் விதத்திலிருந்து உள்நோக்கம் இருப்பதாகத் தெரிகிறது'' என்று கூறிவிட்டு அதற்கு சப்பை கட்ட முடியாமல் திணறுகிறார்.

வை.கோ. 'வெள்ளை அறிக்கை கொடு' என்று பயங்கரமாக முழங்கினார். ராமதாசு, முதல்வர் அறிக்கை வெளியிட வேண்டுமென்றார். ஜெயலலிதாவின் சட்டசபை உரைக்குப் பின் இவர்கள் பேசுவதற்கு எதுவுமே இல்லாமல் போய்விட்டது.

புதிய தமிழகம் கிருஷ்ணசாமி என்றொருவர் இருக்கிறார் என்பதே அவர் யாசர் அராபத்துக்கு மலரஞ்சலி செலுத்தும் போதுதான் தெரிய வந்தது. அப்போதும் அவர் சங்கரமடம் பற்றி மூச்சு விடவில்லை.

திருமாவளவனுக்கு இந்தக் கைது ஆச்சரியமளித்ததாம். எல்லோருக்கும் தான் ஆச்சரியமளித்தது. ஆனால், அதைவிடப் பெரிய ஆச்சரியம் இருக்கிறது. ''இந்த சங்கராச்சாரிகளும் பார்ப்பன எத்தர்களும் ஒழுக்கக்கேட்டின் திருவுருவங்கள் என்பதை எங்கள் அம்பேத்கர் ஏற்கெனவே கூறியிருக்கிறார். எனவே ஜெயேந்திரர் கொலை செய்ததில் அம்பேத்கரின் தொண்டர்களான எங்களுக்கு ஆச்சரியமேயில்லை. இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்கு இது இன்னொரு சான்று'' என்று அவர் முழங்கியிருக்க

www.padippakam.com



ஜெயேந்திரனின் கைதை நாடே கண்டிப்பதாக ஊதிப் பெருக்குகிறது ஆர்.எஸ்.எஸ். ஆனால், காஞ்சியில் கூட, பார்ப்பனக் குடுமிகளைத் தவிர, வேறு எந்தவொரு 'இந்து'வும் ஜெயேந்திரன் கைது செய்யப்பட்டதை எதிர்க்கவில்லை என்பதை இந்தப் படமே நிரூபிக்கும்.

வேண்டும். அல்லது 'தலித்தை சங்கராச்சாரி ஆக்கு' என்று அம்பேத்கரின் கோரிக்கைக்கு உயிர் கொடுத்திருக்க வேண்டும். எதுவும் நடக்கவில்லை. பார்ப்பனியத்துக்கு எதிரான அம்பேத்கர் எனும் வெடிமருந்து தலித்து அமைப்புகளால் தீண்டப்படாமல் கிடந்தது.

வலது, இடது கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரை விசாரணையைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கை. ''சங்கராச்சாரியை நடத்திய விதம் சரியில்லை'' என்று அறிக்கை கொடுத்த 'மார்க்சிஸ்டு' தலைவர் யெச்சூரி, ''அப்படி நான் பேசவேயில்லை'' என்று மறுநாளே மறுத்தார். ஆனால், இப்படியொரு 'அபாண்டமான பொய்யை' கல்கத்தாவிலிருந்து வெளியிட்ட பி.டி.ஐ. செய்தி நிறுவனத்தின்மீது 'மார்க்சிஸ்டு' கட்சி மானநட்ட வழக்குத் தொடரவில்லை.

இந்த அறிக்கைகள் அனைத்தையும் கவனியுங்கள். ஜெயலலிதா எடுத்துள்ள நடவடிக்கைக்கு மேல் இவர்கள் யாருக்கும் எந்தக் கோரிக்கையும் இல்லை.

ஜெயேந்திரருக்கு வழங்கப்படும் சிறப்பு சலுகைகளுக்குக் கண்டனமில்லை; கொலைச் சதியில் அங்கம் வகித்திருக்கக் கூடிய (சங்கரராமனால் குற்றம் சாட்டப்பட்ட) விஜயேந்திரரைக் கைது செய்யுமாறோ, மடத்தில் அதிகாரம் செலுத்தும் இரு சங்கராச்சாரிகளின் உறவினர்களைக் கைது செய்யுமாறோ எந்தக் கட்சியிடமிருந்தும் கோரிக்கை இல்லை. கிரிமினல் கூடாரமான சங்கரமடத்தை வழக்கு முடியும் வரையிலாவது இழுத்து மூட வேண்டும். அதன் கணக்குகளை முடக்க வேண்டும் என்ற சட்ட வரம்புக்கு உட்பட்ட கோரிக்கை கூட இவர்களிடமிருந்து வரவில்லை. பார்ப்பனியத்தை அம்பலப்படுத்துவது குறித்த பேச்சேயில்லை.

ஆனால், பாரதிய ஜனதாவும் சங்க பரிவார அமைப்புகளும் உடனே களத்திலிறங்குகின்றன. இது சிறுபான்மையினரின் வாக்குகளைக் கைப்பற்றும் சதி என்றும், ஒரு இமாமையோ பிஷப்பையோ இவ்வாறு கைது செய்திருக்க முடியுமா என்றும் கேட்கின்றன. இதனை இந்து விரோத நடவடிக்கையாகச் சித்தரித்து, கோயில்களையே தங்கள் போராட்டக் களமாக மாற்றிக் கொள்கின்றன. இந்தக் கைதை திராவிட இயக்கங்களின் சதியாகச் சித்தரிக்கின்றன.

''ஆம், நாங்கள் திராவிட இயக்கம் தான், பார்ப்பன எதிர்ப்பாளர்கள் தான்!'' என்று நெஞ்சு நிமிர்த்திப் பேச ஆளில்லை. ''மதிப்பிற்குரிய வாஜ்பாய் அவர்கள் என்ன கோருகிறார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்'' என்கிறார் புரட்சிப் புயல் வை.கோ. பெர்னாண்டஸ் சிறையில் சங்கராச்சாரியைச் சந்திக்கிறார். கருணாநிதியின் நெருக்கடி நிலைக் கால நண்பர், வை.கோ. மற்றும் நெடுமாறனின் புலி ஆதரவுத் தோழர், திருமாவளவனின் இந்துத்துவ எதிர்ப்புப் போராளி இப்படி ஒரு கீழ்த்தரமான வேலை செய்வதை மேற்படி தலைவர்கள் யாரும் கண்டிக்கவில்லை. சங்க பரிவாரத்தின் நம்பிக்கைக்குரிய இந்தக் கையாளை எதிர்ககவுமில்லை.

தெருவிலிறங்கி ஊர்வலம் போவதையும், போராடுவதையும் கீழ் மக்களுக்குரிய இழி செயலாகக் கருதும் பஞ்சக் கச்சங்களும், மடிசார் புடவைகளும் மனிதச் சங்கிலி அமைக்கின்றனர்; சாலையை மறிக்கின்றனர்; ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். உயர்நீதி மன்ற வளாகத்தில் ஆர்.எஸ்.எஸ். காலிகளை எதிர்த்து மோதவும், தொகாடியாவின் கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் எந்த களம் கண்ட வேங்கையும் தலை காட்டவில்லை. ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள்தான் தமிழகத்தின் மரியாதையைக் காப்பாற்றும் விதத்தில் களத்தில் நின்றன.

இந்தச் சூழ்நிலையை நாங்கள் பெருமையாகக் கருதவில்லை; அவமானமா

போலீசின் தடையை மீறி, மதுரை நகரில் கொலைகாரன் ஜெயேந்திரனின் உருவ பொம்மையை எரித்துக் கைதாகும் ம.க.இ.க. தோழர்கள்.



கக் கருதுகிறோம். எண்ணிப் பாருங்கள். சங்கராச்சாரி கைது செய்யப்பட்டவுடனே ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு சென்று சங்கர மடத்தை நிர்மூல மாக்கியிருந்தால்! ''சங்கராச்சாரியை ஜாமீனில் விடாதே'' என்று ஆயிரக்கணக்கான மக்கள் உயர்நீதி மன்றத்தின் வாயிலில் நின்று முழங்கியிருந்தால்! ''பார்ப்பன கிரிமினல்களின் கூடாரமான சங்கரமடத்தின் சொத்துக்களைப் பறிமுதல் செய்! மடத்துடன் கள்ள உறவைப் பேணும் முதலாளிகள் - அதிகாரிகள் மீது விசாரணை நடத்து!'' என்று தமிழகமெங்கும் கிளர்ச்சி தொடங்கி இந்தச் செய்தி, ஊடகங்களின் வழி நாடெங்கும் பரவியிருந்தால் - அத்வானியும் அசோக் சிங்காலும் தமிழகத்தில் கால் வைத்திருக்க முடியுமா?

இவையெதுவும் சாத்தியமற்றவையல்ல; சங்கராச்சாரியின் கைதுக்கு மக்களின் பேராதரவு இருக்கிறது. ''தமிழனுக்கு மானமில்லை, அறிவில்லை, சொரணையில்லை'' என்று மக்களைச் சாடும் தலைவர்கள்தான் மானமின்றி முடங்கிக் கிடக்கிறார்கள்.

''அவாளும் அவாளும் அடித்துக் கொண்டு சாகட்டும். நாம் தலையிட்டால் அதை அரசியலாக்கி விடுவார்கள்'' என்று பெரிய ராஜதந்திரியைப் போல இவர்கள் தமது மவுனத்துக்கு விளக்கம் சொல்லக் கூடும். அது பொய். பார்ப்பனக் கும்பலை எதிர்க்கும் விருப்பமோ துணிவோ இவர்களுக்கு இல்லை என்பதே உண்மை.

''இதுவே கருணாநிதியாய் இருந்தால் கைது செய்திருக்க மாட்டார்; அவருக்கு இவ்வளவு தைரியம் கிடையாது'' என்பது சாதாரணத் தமிழ் மக்களின் கருத்து மட்டுமல்ல, சங்கராச்சாரிக்கு ஆதரவாகத் தெருவில் நிற்கும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனரின் கருத்தும் இதுதான். இத்தகையதொரு கருத்தை மக்கள் மத்தியில் உருவாக்கியதற்காக நாம் ஜெயலலிதாவைக் குற்றம் சொல்ல முடியாது.

இந்த எதிர்க்கட்சிகள் எனப்படுவோர் அனைவரும் பூணூலைத் தவிர வேறு பல இழைகளால் சங்கரமடத்துடனும், அதன் பின்பலமாக நிற்கும் பார்ப்பன அதிகார வர்க்கம், ஊடகங்கள் மற்றும் முதலாளிகளுடனும் பிணைக்கப் பட்டுள்ளனர். எனவே, 'சங்கரமடத்தை இழுத்து மூடு' என்ற நமது முழக்கம் 'நாற்காலி ஆசையை ஊத்தி மூடு' என்று இவர்கள் காதில் எதிரொலிக்கக் கூடும்.

லட்சோப லட்சம் தொண்டர்களும், சீருடை அணிந்து சல்யூட் அடிக்கும் 'படை' வீரர்களும் இருந்தபோதும், ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டு சங்கரமடத்துக் கும்பல் பீதியில் உறைந்து கிடக்கும் போதும், தீவிர 'பார்ப்பன எதிர்ப்பு' வேங்கைகள் பம்முகின்றனர் பதுங்குகின்றனர்.

பாவம் சங்கரராமன்!

● சூரியன்

12-ஆம் பக்கத் தொடர்ச்சி

*அவர் லட்சியம். ஓடிபோய் கீழ்சாதி பையனை காந்தர்வ விவாஹம் (காதல் மணம்) செய்து கொண்ட அவன் பெண்ணைத் தேடிப்பிடித்து தன்னிடம் கைங்கர்யம் செய்து வந்த அப்பாவி பிராம்மண பையனுக்கு தஷணை கொடுத்து (காசு கொடுத்து) வைதீகமாக புனர் விவாஹம் (மறுமணம்) செய்து வைத்து சனாதன தர்மத்தை காப்பாற்றி விட்டார்.*

*ராமுவின் பிள்ளை சாமாவுக்கு அப்பிராம்மண சம்மந்தமுள்ள (பார்ப்பனர் அல்லாதவர் ஒருவருடன் கள்ள உறவு வைத்திருக்கும்) பெண்ணை தன் செலவில், தன் சொந்த ஊரில் விவாஹம் செய்து வைத்து வர்ணாச்ரம தர்மத்தை காப்பாற்றி விட்டார். அந்த சாமாவின் சம்சாரத்திற்கு ஆயிரக்கணக்கில் மாத சம்பளம், போன், கார்வசதிகள் வேறு செய்து கொடுத்திருக்கிறார்.*

*அவள் தலைமையில் அதிருத்ர சண்டி ஹோமம் செய்து (வேள்வி நடத்தி) வேத பண்டிதர்களை கௌரவித்து விட்டார்.*

*''ராமு சம்சாரத்துடன் சகவாசம் வேண்டாம்'' என்று ஸ்ரீ ஸ்ரீ மகா பெர்யவாளே (விஜயேந்தரருக்கு) புத்தி சொன்ன போதும் விடாமல் தொடர்ந்து உறவு வைத்துக் கொண்டு குரு பக்தியில் உயர்ந்து நிற்கிறார். ராமு சம்சாரத்துடன் ராத்திரி நேரத்தில் நீண்ட நேரம் என்ன தான் பேசுவார்?*

*ஏழை பாழைகளுக்கு - நிர்கதியாய் இருப்பவர்களுக்கு ஒத்தாசை செய்வதை சமூக சேவை என்று சொல்லலாம். இளம் பெண்களுக்கு அதுவும் ராமு குடும்பத்து பெண்களுக்கு ஆபரணங்கள் வாங்கி தருவதும் ''சுந்தரி சில்க்ஸ்'' கடையில் பட்டு புடவைகள் வாங்கித் தருவதும் சமூக சேவையா?*

*8. நீங்கள் இருவரும் குறிப்பிட்ட சில பெண்களுடன் நீண்ட நேரம் டெலிபோனில் என்ன தான் பேசுவீர்கள்?*

*9. ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவிலுக்கு தர்ம கர்த்தாவாக இருந்து கொண்டு கோவில் சொத்துக்களை ஸ்வாதீனம் செய்து கொண்டது (சுருட்டிக் கொண்டது) நியாயமா?*

*10. வெகு காலமாக ஸ்ரீ மடத்திற்கு சொந்தமாக இருந்த ஆஸ்திகளை பராதீனம் செய்து விட்டீர்களே? (சொத்துக்களை கைமாற்றி விட்டீர்களே) நான் எழுதியிருப்பது கொஞ்சம் தான். நீங்கள் இருவரும் செய்து வரும் ஊழல்கள் அக்கிரமங்கள் சாஸ்த்ரவிரோதமான கார்யங்கள் இவைகளை விவரிப்பது அசாத்யமான கார்யம்.*

*எனக்கு மிகவும் வேதனை தரும் விஷயம் இதுதான்.*

*ஸ்ரீ ஸ்ரீ மகா பெரியவர்களுக்கு கைங்கர்யம் செய்யும் பாக்கியம் பெற்ற ஸிம்ஸன் வைத்தா, ராயபுரம் பாலு, திருவிடைமருதூர் சந்திரா, திருச்சி குப்புசாமி அய்யா ஆகியோர் கேவலம் வயிற்றுப் பிழைப்பிற்காக உங்கள் காலடியில் விழுந்து பெரளுவதுதான் வேதனையாக இருக்கிறது.*

*இருந்தாலும் நீங்கள் இருவரும் செய்து வரும் ஊழல்கள் குறித்து தங்களுக்கு பகிரங்கமாக எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பியுள்ளதுடன் தேவைபட்டால் கோர்டில் தாவா வழக்கு தொடரவும் ஸ்ரீமான் அனந்தகிருஷ்ணய்யர் பையன் சிவ சங்கரராமன் தயாராக இருப்பதாக கேள்விபட்டேன். அது சற்று மனசுக்கு ஆறுதலாக இருக்கிறது.*

*கடைசியாக நான் தெரிவிக்க விரும்புவது இதுதான்.*

*சனாதன தர்மத்திற்கும் வைதீக சம்ப்ரதாயத்திற்கும் சன்யாச ஆச்ரம தர்மத்திற்கும் நீங்கள் இருவரும் செய்து வரும் துரோகத்திற்கு அந்த பரமேசுவரனாகிய சந்திரமௌலீஸ்வரர் தான் உங்களை தண்டிக்க வேண்டும்.*

*நீங்கள் இருவரும் செய்து வரும் பாவங்களுக்கு பிராயச் சித்தமே கிடையாது.*

*சோமசேகர கனபாடிகள்*
*21.05.2002* *ஜம்புகேச்வர க்ஷேத்ரம்.*

(குறிப்பு: செப்'2002-இல் தான் சென்னை இராதாகிருஷ்ணன் கூலிப்படையால் தாக்கப்பட்டுள்ளார். அந்தத் தாக்குதல்தான் இந்தக் கடிதங்களுக்கு ஜெயேந்திரர் கொடுத்த பதில் என்று தெரிகிறது.)

www.padippakam.com

# “சங்கர மடத்தை மூடு! ஜெயேந்திரனைத் தூக்கிலிடு!”

## — ஓங்கி ஒலிக்கும் புரட்சிக் குரல்

உயர்நீதி மன்ற வளாகத்தில் இந்து முன்னணிக் காலிகளை புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் எதிர்கொண்டு மோதிய காட்சி தொலைக்காட்சிகள் வழியே நாடெங்கும் ஒளிபரப்பானது. சங்க பரிவாரக் கும்பலைத் தவிர தமிழகத்தின் ஆகப் பெரும்பான்மையான மக்கள் சங்கராச்சாரிக்கு எதிராகத்தான் நிற்கிறார்கள் என்ற உண்மைக்குச் சாட்சியாக அமைந்தது இந்தக் காட்சி.

சுமார் 150 பேர் கொண்ட இந்து முன்னணிக் கும்பலை வெறும் பதினைந்தே தோழர்கள் எதிர்கொண்டு மோதி விரட்டியடித்தார்கள். ம.க.இ.க.வின் சென்னை மாவட்டச் செயலர் தோழர் வெங்கடேசனும், பு.மா.இ.மு. சென்னைச் செயலர் தோழர் கார்த்தியும் இந்த மோதலில் காயமடைந்தனர்.

முழக்க அட்டைகளைத் தவிர வேறு ஆயுதம் எதுவும் கையில் இல்லாத தோழர்கள் எதிரிகளின் கொடிகளையே பிடுங்கித் திருப்பித் தாக்கினார்கள்.

எமது தோழர்கள் அன்று நீதிமன்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத்தான் சென்றார்கள். முந்தைய நாள் உயர்நீதி மன்றத்தில் நடந்த விவாதங்களைக் கண்ட பிறகும் சுயமரியாதையுள்ள எந்த மனிதனும் சும்மாயிருந்திருக்க முடியாது.

எனவேதான், ''நீதிமன்ற அவமதிப்பில் சிறை செல்வதாக இருந்தாலும் சரி, இந்த நீதிமன்றத்தை அம்பலப்படுத்தியே தீருவது'' என்ற முடிவில் முழக்க அட்டைகளை ஏந்தி அங்கே சென்றனர் தோழர்கள். ஆனால், எதிரிகள் வேறு விதமான வாய்ப்பை நமக்கு வழங்கிவிட்டனர்.

மறுநாள், தொகாடியாவின் தலைமையில் வள்ளுவர் கோட்டத்தில் கண்டனக் கூட்டம். அந்த வட்டாரம் முழுவதும் 1000 எதிர்ப்புச் சுவரொட்டிகள் ஒட்டினோம். முந்தைய நாள் அடிபட்ட புலிகள் ஒரு சுவரொட்டியைக் கூடத் தொடவில்லை. ஆனால் ''நக்சலைட்டுகள்தான் நம் எதிரிகள். நாளை 5000 பேர் செல்வோம். கை காலை உடைப்போம்'' என்று முழங்கினார் வி.இ.ப. தலைவர் வேதாந்தம்.

முந்தின நாள் வரமுடியாமல் போனதற்காக வருந்திய பலருக்கும், எல்லா ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பாளர்களுக்கும் தகவல் தெரிவித்தோம். தத்தம் அமைப்புகளின் கொடிகளுடன் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து முழங்குவதன் மூலம் ''பெரியார் பிறந்த மண்'' என்ற தமிழகத்தின் கவுரவத்தை நாடறியச் செய்யலாம் என்று நாங்கள் விழைந்தோம்.

நாங்கள் தயாரிப்புடன் சென்றோம். பெரியார் தி.க. தொண்டர்கள் வந்திருந்தனர். மார்க்சிஸ்டு கட்சியின் டைஃபி இயக்க இளைஞர்கள் 4 பேர்... மற்றபடி ஆயிரக்கணக்கில் போலீசார். தடையை மீறி உள்ளே நுழைந்த எமது தோழர்கள் 28 பேர் கைது; டைஃபி இயக்கத்தினர் 4 பேர் கைது; சங்கராச்சாரிக்கு ஆதரவாக காசியிலிருந்து வந்திருந்த ஒரு சாமியார் கைது. அவ்வளவுதான்.

முந்தின நாள் சவடால் அடித்த ஆர்.எஸ்.எஸ். கும்பலை அங்கே காணவில்லையென்பது கேலிக்குரிய உண்மை. ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பாளர்களையும் காணோம் என்பது வேதனைக்குரிய உண்மை! மாமாக்களும் மாமிகளும் மனிதச் சங்கிலி நடத்துகிறார்கள்; ஆனால் பார்ப்பனியத்தை எதிர்த்து அனல் கக்கும் தலைவர்கள், அவர்களது தொண்டர்கள், எழுத்தாளர்கள் யாரையும் இதுவரை களத்தில் காணோம்!

உயர்நீதி மன்ற மோதல் முதல் தமிழகமெங்கும் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், கொடும்பாவி எரிப்பு போன்ற நடவடிக்கைகளைப் பதிவு செய்து கொள்ளும் தொலைக்காட்சி காமெராக்கள் 'சங்கரமடத்தை இழுத்து மூடு' என்பன போன்ற முழக்கங்கள் கொண்ட அட்டைகளை மட்டும் கவனமாகத் தணிக்கை செய்து வெளியிடுகின்றன. எமது அமைப்புகளின் பெயரையும் சேர்த்து இருட்டடிப்பு செய்வது ''சன் டிவி''யின் சிறப்பு! இன்னமும் 'ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்' என்றே அழைக்கும் 'சூத்திர' தொலைக்காட்சியிடம் வேறெதை எதிர்பார்ப்பது?

தமிழகமெங்கும் பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடும் எமது தோழர்கள் எதிரிகளுடன் மோதுகிறார்கள்; கைது செய்யப்படுகிறார்கள். எமது போராட்டம் தொடர்கிறது.

தமிழகத்தின் மாபெரும் பார்ப்பன எதிர்ப்பு மரபு, சங்கராச்சாரிக்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கும் எதிராகத் திரண்டு நிற்கும் மக்களின் பொதுக் கருத்து ''என்னை வழி நடத்திச் செல்'' என்று காத்துக் கிடக்கிறது. மர்மமான முறையில் மவுனம் சாதிக்கும் பல்வேறு கட்சிகளின் தலைமைகளை அவர்களது தொண்டர்கள் 'இனம்' கண்டு கொள்ளட்டும்!

### சென்னை

உயர்நீதி மன்றத்தில் இந்து வெறியர்களின் தாக்குதலை எதிர்கொண்டதைத் தொடர்ந்து மீண்டும் தடையை மீறி உயர்நீதி மன்ற வளாகத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் - கைதுகளுக்குப் பிறகு, மீண்டும் மெமோரியல் ஹால் அருகே காலை 9 மணியளவில் ''சங்கரமடத்தை இழுத்து மூடு! கொலைகார சங்கராச்சாரிக்கு சிறப்பு சலுகைகள் தராதே!'' என்ற மைய முழக்கத்துடன் ம.க. இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. தோழர்கள் எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பெரியார் தி.க.வினரும் பார்ப்பன எதிர்ப்பாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பார்ப்பன பயங்கரவாதத்துக்கு எதிராக முழங்கினர்.

### திருச்சி

நகரின் மையமான காந்தி மார்க்கெட் பகுதியில் 13.11.04 அன்று காலை 11 மணியளவில் கொலைகார சங்கராச்சாரியைத் தூக்கில் போடு! கிரிமினல் கூடாரமான சங்கரமடத்தை இழுத்து மூடு!'' என்ற முழக்கங்களுடன் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய அமைப்புகள் இணைந்து சங்கராச்சாரியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை நடத்தின. இப்போராட்டத்தை அறிவித்து நகரெங்கும் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. காந்தி மார்க்கெட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுமிடத்தில் இனிப்புகள் வழங்கி பட்டாசுகள் வெடித்து முழக்கமிட்டபடியே சங்கராச்சாரியின் உருவ பொம்மையை செருப்பால் அடித்தும் மிதித்தும் தரதரவெனக் கட்டி இழுத்து வந்து தீயிட்டுக் கொளுத்தினர்.



சிவகங்கையில்

www.padippakam.com

புரட்சிகர அமைப்புகளில் தோழர்களும் வழக்குரைஞர்களும் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கொலைகார சங்கராச்சாரி போல வேடமணிந்த ஒரு ஆதரவாளருக்கு கழுத்தில் செருப்பு மாலை போட்டு விளக்குமாறால் அடித்து இழுத்து வந்தனர். இதைக் கண்டு பீதிய.டைந்த போலீசார், இந்த சங்கராச்சாரியையும் கைது செய்து வேடத்தைக் கலைத்தனர்.



விழுப்புரத்தில் உள்ள சங்கர மடக் கிளையின் முன்பு (இறந்து போன சங்கராச்சாரி பிறந்து வளர்ந்த வீடு) கொடும்பாவி எரிக்க முயன்றபோது வி.வி.மு. தோழர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

## ஈரோடு

14.11.04 அன்று மாலை 5 மணியளவில் பு.மா.இ.மு. தோழர்கள் பேருந்து நிலையம் அருகே சங்கராச்சாரியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை நடத்தினர். போக்குவரத்து தடைபட்டு பெருமளவில் திரண்ட உழைக்கும் மக்கள் இத்திடீர் போராட்டத்தை வரவேற்று ஆதரித்தனர். "இது தந்தை பெரியார் பிறந்த மண் என்பதை உங்களது போராட்டத்தால் நிரூபித்துக் காட்டி விட்டீர்கள்" என்று பல்வேறு கட்சிகள் - அமைப்புகளைச் சேர்ந்த பார்ப்பன எதிர்ப்பாளர்கள் வாழ்த்தி வரவேற்றனர். கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை உள்ளூர் நாளேடுகளும் தொலைகாட்சிகளும் பரபரப்பாக வெளியிட்டன. இப்போராட்டத்தில் ஈடுபட்ட முன்னணியாளர்கள் நால்வரைக் கைது செய்து போலீசார் கோவை சிறையில் அடைத்தனர்.

இக்கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்கள் கூடி நின்று உற்சாகத்துடன் வரவேற்றனர். நெல்லிக்காய் வியாபாரி ஒருவர் கட்டுக்கடங்காத உற்சாகத்துடன், உங்களுக்கு நன்கொடை கொடுக்க இப்போது என்னிடம் காசில்லை என்று கை நிறைய நெல்லிக்காயை அள்ளி தோழர்களுக்குக் கொடுத்து நெஞ்சார வாழ்த்தினார். இதுதவிர இன்னும் சில வியாபாரிகளும், ஒரு போலீசுகாரரும் கிலோ கணக்கில் சாக்லெட் மிட்டாய்களை வாங்கி அனைவருக்கும் அள்ளிக் கொடுத்து பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

இறுதியில், போலீசார் முன்னணித் தோழர்கள் 9 பேர் மீது பொய் வழக்கு சோடித்து திருச்சி சிறையிலடைத்தனர். கிரிமினல் சங்கராச்சாரிக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் அனைத்து கைதிகளுக்கும் கொடு என்று கோரி சிறையிலும் தோழர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

17.11.04 அன்று மாலை அண்ணா சிலை அருகே ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய அமைப்புகள் இணைந்து "சங்கரமடத்தை இழுத்து மூடு! பயங்கரவாதி ஜெயேந்திரனைத் தூக்கில் போடு! சிறையில் அவனுக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்காதே!" என்ற முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. முன்னணியாளர்கள் எழுச்சிமிகு உரையாற்றினர். ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதியளித்து, இந்த ஆர்ப்பாட்டத்தை பிசுபிசுக்கச் செய்து விடலாம் என்று போலீசு மனப்பால் குடித்தது. ஆனால், பெருந்திரளான உழைக்கும் மக்களும் பார்ப்பன எதிர்ப்பாளர்களும் திரண்டு வந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று போலீசின் முகத்தில் கரிபூசினர்.

மீண்டும் 22.11.04 அன்று பார்ப்பன பயங்கரவாதி ஜெயேந்திரனுக்கு சிறப்பு சலுகைகள் வழங்காதே! என்ற மைய முழக்கத்துடன் புத்தூர் நாலுரோடு அருகே தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்தை இப்புரட்சிகர அமைப்பினர் நடத்தினர்.

## தஞ்சை

13.11.04 அன்று பட்டாசுகள் வெடித்து ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் சங்கராச்சாரியின் கொடும்பாவியைக் கட்டி இழுத்து வந்து தஞ்சை ரயில் நிலையம் அருகே தீயிட்டுக் கொளுத்தினர். "கொலைகார ஜெயேந்திரனை பிணையில் விடாதே! பயங்கரவாத கூடாரமான சங்கர மடத்தை இழுத்து மூடு!" என்ற மைய முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டமும் கொடும்பாவி எரிப்புப் போராட்டமும் மக்களிடம் ஆரவாரமான வரவேற்பைப் பெற்றது.

## மதுரை

ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் 13.11.04 அன்று காலை 10 மணியளவில் கட்டபொம்மன் சிலை அருகே, கொலைகார சங்கராச்சாரியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்தை அறிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதால், போலீசார் அப்பகுதியைச் சுற்றிக் குவிக்கப்பட்டிருந்தனர். அத்தடைகளை தாண்டி கொடும்பாவி எரிப்புப் போராட்டம் வெற்றிகரமாக நடந்தது. போராட்டத்தில் ஈடுபட்ட முன்னணியாளர்களைப் போலீசு கைது செய்து, பின்னர் விடுவித்தது.

16.11.04 அன்று "சங்கரமடத்தை இழுத்து மூடு! ஜெயேந்திரனைத் தூக்கில் போடு! மடத்து சொத்துக்களைப் பறிமுதல் செய்!" என்ற முழக்கங்களுடனும் சென்னையில் இந்து முன்னணி குண்டர்களால் தோழர்களை விடுதலை செய்யக் கோரியும், சிறையில் கொலைகார ஜெயேந்திரனுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்படுவதை எதிர்த்தும் 17.11.04 அன்று மாலை பன்னீர்செல்வம் பூங்கா அருகே எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## பென்னாகரம்

கிரிமினல் ஜெயேந்திரன் கைது செய்யப்பட்டவுடனேயே, கொலைகார சங்கராச்சாரியின் கேலிச் சித்திரங்களுடன் "சங்கரமடத்தை இழுத்து மூடு! ஜெயேந்திரனைத் தூக்கில் போடு" என்ற முழக்கங்களுடன் இப்பகுதியெங்கும் பெரிய அளவில் தட்டிகள் கட்டப்பட்டு துண்டுப் பிரசுரங்களுடன் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நவம்பர் 14 அன்று பகல் 12 மணியளவில் பென்னாகரம் பேருந்து நிலையம் அருகே பறையடித்து பட்டாசு

**முன் அட்டையில்...**

**சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்துவெறி குண்டர்களின் தாக்குதலை எதிர்த்து எமது தோழர்கள் நடத்திய போராட்டம் மற்றும் தமிழகமெங்கும் ம.க.இ.க. – வி.வி.மு. – பு.மா.இ.மு. – பு.ஜ.தொ.மு. அமைப்புகளால் நடத்தப் பட்டு வரும் சங்கராச்சாரி கொடும்பாவி எரிப்பு – ஆர்ப்பாட்டங்கள்.**


படிப்பகம்

www.padippakam.com

வெடித்து ஜெயேந்திரனின் கொடும்பாவி விண்ணதிரும் முழக்கங்களுடன் எரிக்கப்பட்டது. இப்போராட்டத்தைத் தடுக்க நாற்புறமும் போலீசார் குவிக்கப்பட்டிருந்த போதிலும், அதையும் மீறி நடந்த இந்தக் கொடும்பாவி எரிப்புப் போராட்டம் உழைக்கும் மக்களிடமும் பிற கட்சிகள் - அமைப்புகளிடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

## நெய்வேலி

பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து ''கொலைகாரன் ஜெயேந்திரனைத் தூக்கில் போடு! சங்கரமடத்தை இழுத்து மூடு!'' எனும் முழக்கங்களுடன் 15.11.04 அன்று நண்பகலில், போலீசு தடையை மீறி ஆர்ப்பாட்டமும் ஜெயேந்திரனின் உருவப்பட எரிப்புப் போராட்டத்தையும் நடத்தின. இத் திடீர் போராட்டத்தை ஆச்சரியமாகப் பார்த்த உழைக்கும் மக்கள் வரவேற்று ஆதரித்ததோடு, தி.க., சிறுத்தைகள் மற்றும் தமிழினக் குழுக்களைச் சேர்ந்த அணிகளும் ''நீங்கள்தான் பார்ப்பன எதிர்ப்பில் முன்னணியாகத் திகழ்கிறீர்கள்'' என்று நெஞ்சார வாழ்த்தி ஆதரித்தனர்.

## கடலூர்

''சங்கர மடத்தை இழுத்து மூடு! கிரிமினல் ஜெயேந்திரனைத் தூக்கில் போடு! சிறையில் அவனுக்குச் சலுகைகள் கொடுக்காதே!'' என்ற முழக்கங்களுடன் சங்கராச்சாரி கைது செய்யப்பட்டவுடன் நகரெங்கும் பரவலாக பு.மா.இ.மு.வினர் சுவரொட்டிகளை ஒட்டினர். பரபரப்பான இச்சுவரொட்டிகளைப் படமெடுத்து சில நாளேடுகள் வெளியிட்டதோடு, பல்வேறு கட்சிகளிலுமுள்ள பார்ப்பன எதிர்ப்பாளர்களும் இதை வரவேற்று ஆதரித்தனர். ''ஜெயேந்திரனைப் பிணையில் விடாதே! சிறையில் வழங்கப்படும் சிறப்புச் சலுகைகளை ரத்து செய்!'' என்ற கோரிக்கையுடன் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கோரியபோது, போலீசு மறுத்து விட்டது. இருப்பினும் திட்டமிட்டபடி 15.11.04 அன்று தடையை மீறி அம்பேத்கர் சிலையருகே எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தி முன்னணியாளர்கள் கைதாயினர்.

பின்னர், இந்துவெறி அமைப்புகள் கொலைகார ஜெயேந்திரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து 22.11.04 அன்று விடுத்த கடையடைப்புப் போராட்டத்தை எதிர்த்து ஊர்வலமும் தொடர் முழக்க ஆர்ப்பாட்டமும் நடத்த அனுமதி கோரிய போது போலீசு அதையும் மறுத்தது. போலீசு தடையையும் மீறி 22.11.04 அன்று காலை 10 மணியளவில் கடலூர் பு.மா.இ.மு., நெய்வேலி பு.ஜ.தொ.மு ஆகிய அமைப்புகளின் தோழர்கள் சுப்புராயலு பூங்கா அருகிலிருந்து அம்பேத்கர் சிலை நோக்கி முழக்கமிட்டபடியே ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.



இலால்குடியில்

இந்த திடீர் ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்தை போலீசார் தடுத்து முன்னணியாளர்களை கைது செய்தனர்.

## கோவை

ஆர்ப்பாட்டம் நடத்த தொடர்ந்து போலீசார் அனுமதி மறுத்து வந்த நிலையில், நவம்பர் 15 அன்று ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. தோழர்கள் திடீர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். காந்திபுரம் மையப் பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக வந்த தோழர்கள் தமிழ்நாடு ஓட்டல் எதிரே, ''கொலைகார ஜெயேந்திரனை பிணையில் விடாதே! சங்கர மடத்தை மூடு!'' என்ற மைய முழக்கங்களுடன் பெண்கள் குழந்தைகளோடு தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்தனர். போராட்டத்தை அறிவித்து ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை போலீசார் கடமை உணர்வோடு கிழித்தெறிந்து தமது பார்ப்பன விசுவாசத்தை நிரூபித்தனர்.

பின்னர், மீண்டும் நவம்பர் 19 அன்று தடையை மீறி திடீர் ஆர்ப்பாட்டத்தை தோழர்கள் நடத்தினர். பெண்கள் - குழந்தைகள் உட்பட முன்னணியாளர்களைக் கைது செய்த போலீசு, பின்னர் அனைவரையும் விடுவித்தது.

## சீர்காழி

வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து 16.11.04 அன்று காலை 11 மணியளவில் பழைய பேருந்து நிலையம் அருகே கொலைகார சங்கராச்சாரியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை விண்ணதிரும் முழக்கங்களுடன் நடத்தினர். தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்து சங்கராச்சாரியின் கொடும்பாவியை எரித்த 'குற்றத்திற்காக' மார்க்சிய - பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினர் உள்ளிட்ட 10 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

## விருத்தாசலம்

16.11.04 அன்று வி.வி.மு. சார்பில் பார்ப்பன பயங்கரவாதத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் கடலூர் மாவட்டச் செயலர் வழக்குரைஞர் ராஜு, தமிழ் மக்கள் அறக்கட்டளையின் காவலர் புலவர் கருப்பையா, தில்லை நடராசர் கோயிலில் தமிழில் தேவாரம் - திருவாசகம் பாட வேண்டுமென நீண்டகாலமாக போராடி வரும் சிவனடியார் ஆறுமுகசாமி ஆகியோர், பார்ப்பன பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தியும், பார்ப்பனீயத்தால் தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள கேடுகள் பற்றியும், சங்கரமடத்தின் தீண்டாமையை அம்பலப்படுத்தியும், கிரிமினல் கூடாரமான சங்கரமடத்தை மூடக் கோரியும் கண்டன உரையாற்றினர்.

## விழுப்புரம்

பு.மா.இ.மு., வி.வி.மு. தோழர்கள் இணைந்து 16.11.04 அன்று பகல் 12 மணியளவில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக ''சங்கராச்சாரியை பிணையில் விடாதே! சங்கர மடத்தை இழுத்து மூடு!''





வெளிவந்து விட்டது

**உலக சமூக மன்றத்தின் (WSF) அரசியல் பொருளாதார உள்நோக்கம்**

உலகமயமாக்கலை எதிர்த்துப் போராட நாம் கற்றுணர வேண்டிய படிப்பினைகள்

உலக சமூக மன்றம் ஏகாதிபத்திய உலகமயமாக்கலை எதிர்த்துப் போராடும் அமைப்பா?

இடது – வலது கம்யூனிஸ்டுகளின் கூற்றை மறுக்கும் நூல்

புதிய ஜனநாயகம் வெளியீடு

விலை:30

நூல் கிடைக்குமிடம்

கீழைக்காற்று, 10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002. தொலைபேசி: 2841 2367


படிப்பகம்

www.padippakam.com

என்ற முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். ஒருபுறம் ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே மறுபுறம், விழுப்புரத்தில் அக்ரஹாரத் தெருவிலுள்ள சங்கரமடத்தை நோக்கி பெண் தோழர்கள் உள்ளிட்ட ஒரு குழுவினர் சங்கராச்சாரியின் உருவப் பொம்மையைக் கட்டி இழுத்துச் சென்று முழக்கமிட்டபடியே தீ வைத்து எரிக்க முயன்றனர். போலீசார் அக்கொடும்பாவி பொம்மையைப் பறிமுதல் செய்து போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்களைக் கைதுசெய்தனர். விரிவான பிரச்சாரத்துடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டமும் கொடும்பாவி எரிப்புப் போராட்டமும் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

பின்னர், "காஞ்சி கொலைகாரன் ஜெயேந்திரனுக்கு சிறப்பு சலுகைகள் வழங்காதே! பிணையில் விடாதே! சங்கரமடத்தை இழுத்து மூடி சொத்துக்களைப் பறிமுதல் செய்!" என்ற மைய முழக்கத்துடன் 22.11.04 அன்று பகல் 12 மணியளவில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்தை இவ்வட்டார வி.வி.மு., பு.மா.இ.மு.வினர் நடத்தினர்.

## சிவகங்கை

ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து, "பார்ப்பன பயங்கரவாதி ஜெயேந்திரனை பிணையில் விடாதே! சங்கரமடத்தை இழுத்து மூடு!" என்ற முழக்கங்களுடன் 16.11.04 அன்று அரண்மனை வாயில் முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடத்தின. "கிரிமினல் ஜெயேந்திரனுக்கு சிறப்புச் சலுகை கொடுக்காதே! ரேஷன் அரிசி சோத்தைப் போடு! காவி உடையைக் கழற்றி, கைதி உடையை மாட்டு! வாழை இலையை வைக்காதே, கக்கூசுக்குப் போகச் சொல்லு!" என்ற முழக்கங்கள் கொலைகார சங்கரனையும் போலீசு - நீதித்துறை - சிறைத்துறையின் பாரபட்ச அணுகுமுறையையும் மக்களிடம் வெளிச்சம் போட்டுக் காட்டின. ஆர்ப்பாட்டத்தின் போது திடீரென கிரிமினல் சங்கராச்சாரியின் கொடும்பாவி தீ வைத்து எரிக்கப்பட்டது.

இதைக் கண்டு ஆத்திரமடைந்த போலீசார் முன்னணித் தோழர்கள் 12 பேரைக் கைதுசெய்தது. போலீசு நிலையத்தில் குடிபோதையிலிருந்த துணை ஆய்வாளர் ராஜேசும், ஏட்டு பாலாமணியும் தோழர்களை உள்ளாடையுடன் நிற்க வைத்து அவமானப்படுத்தி ஆபாசமாகப் பேசி கடுமையாகத் தாக்கியதோடு பொய்வழக்கு சோடித்து சிறையில் தள்ளினர். பிணை கிடைத்ததும் இத்தோழர்கள் சிறையிலிருந்து முழக்கமிட்டபடியே வீதிகளில் ஊர்வலமாக வந்தனர். தாக்குதலுக்குள்ளான தோழர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பின்னர், தோழர்களைத் தாக்கிய குடிகார போலீசு மீது நடவடிக்கை எடுக்குமாறு ஆய்வாளரிடம் புகார் மனு தரப்பட்டது. மாவட்ட போலீசு கண்காணிப்பாளருக்கும் புகார் மனு அனுப்பப்பட்டதோடு, போலீசின் ரௌடித்தனத்தை அம்பலப்படுத்தி நகரெங்கும் கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

## ஓசூர் - ராம்நகர்

அண்ணாசிலையிலிருந்து காந்தி சிலை நோக்கி 16.11.04 அன்று காலை முழக்கமிட்டபடியே கொலைகார சங்கராச்சாரியின் கொடும்பாவியுடன் ஊர்வலமாகச் சென்ற பு.ஜ.தொ.மு. தோழர்கள், மையமான பகுதியில் கிரிமினல் ஜெயேந்திரனின் கொடும்பாவியை தீயிட்டுக் கொளுத்தினர். பட்டாசுகள் வெடித்து முழக்கமிட்டனர். போக்குவரத்து தடைபட்டதால் ஓடோடி வந்த போலீசு, முன்னணியாளர்களைக் கைது செய்தது. இதற்கு முதல் நாளன்று இந்துவெறி பாசிச அமைப்புகள் கிரிமினல் ஜெயேந்திரனை விடுதலை செய்யக் கோரி நடத்திய திடீர் ஆர்ப்பாட்டத்துக்கு போலீசு முழு ஒத்துழைப்பு கொடுத்தது. கொலைகார கும்பலுக்கு ஆதரவாகச் செயல்படும் போலீசை அம்பலப்படுத்தி நகரெங்கும் கண்டன சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

## இலால்குடி

17.11.04 அன்று பேருந்து நிலையம் அருகே, "கிரிமினல் சங்கராச்சாரியை தூக்கில் போடு! சங்கரமடத்தை இழுத்து மூடி சொத்துக்களைப் பறிமுதல் செய்! சிறையில் ஜெயேந்திரனுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்காதே!" என்ற முழக்கங்களுடன் வி.வி.மு. தோழர்கள் சங்கராச்சாரியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை நடத்தினர். இந்தப் போராட்டம் காரணமாக போக்குவரத்து தடைபட்டு, பேருந்துகள் வரிசையாக நின்றன. பொதுமக்களும் பேருந்தில் பயணம் செய்தவர்களும் இதுதான் சரியான போராட்டம் என்று உற்சாகத்தோடு வரவேற்றனர்.

## தர்மபுரி

17.11.04 அன்று காலை 9 மணியளவில் பேருந்து நிலையம் அருகே பு.மா.இ.மு., வி.வி.மு. தோழர்கள் இணைந்து முழக்கமிட்டபடியே சாலையை மறித்து திடீர் ஆர்ப்பாட்டம் நடத்தி, கிரிமினல் சங்கராச்சாரி எரிப்புப் போராட்டத்தை நடத்தினர். போக்குவரத்து தடைபட்டு பெருந்திரளான உழைக்கும் மக்கள் கூடி இப்போராட்டத்தை ஆதரித்தனர். தகவலறிந்து ஓடோடி வந்த போலீசு தீயை அணைத்து கொடும்பாவியைத் தூக்கிச் சென்று, முன்னணித் தோழர்களைக் கைது செய்து சிறையிலடைத்தது.

## சேலம்

பு.ஜ.தொ.மு. தோழர்கள் 19.11.04 அன்று காலை 10 மணியளவில் பழைய பேருந்து நிலையம் - மணிக்கூண்டு அருகே எழுச்சிமிகு முழக்கங்களுடன் சங்கராச்சாரி கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை நடத்தினர். இதை உள்ளூர் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின. முன்னணித் தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டனர்.


## உசிலம்பட்டி

"கொலைகார ஜெயேந்திரனை பிணையில் விடாதே! சங்கரமடத்தை இழுத்து மூடு!" என்ற மைய முழக்கத்துடன் 22.11.04 அன்று மாலை முருகன் கோயிலருகே வி.வி.மு. ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. ஜெயேந்திரன் போல் வேடமணிந்த ஒரு தோழர், ஒரு கையிலே ரத்தக்கறை படிந்த வீச்சரிவாளும், மறுகையிலே வெட்டப்பட்ட தலையுடனும் தோன்றி, "லோக ஷேமத்துக்காகத்தான் கொலை பண்ணினேன்" என்று அருளாசி வழங்கியதை பெருந்திரளான உழைக்கும் மக்கள் எள்ளி நகையாடினர். பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் இதைப் படம் பிடித்து வெளியிட்டன.

தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் செயல்படும் பகுதிகளில் போராட்டம் தொடர்கிறது.

தகவல் தொகுப்பு:
பு.ஜ. செய்தியாளர்கள்


**இப்போது விற்பனையில்...**




**ஜெயேந்திரன் கைதை 'இந்து' மதத்தின் மீதான தாக்குதலாகவும், இந்துக்களை அவமதிக்கும் நடவடிக்கையாகவும் சித்தரிக்கும் ஆர். எஸ். எஸ். பார்ப்பனக் கும்பலின் புரட்டுத்தனத்தை அம்பலப்படுத்தும்**

பார்ப்பன பயங்கரவாதிகளின் கூடாரமே
சங்கரமடம்

**விலை ரூ. 5**

**நூல் கிடைக்குமிடம்:**
**இரா. சீனிவாசன், 18, முல்லைநகர் வணிக வளாகம், 2-ஆவது நிழற்சாலை, அசோக் நகர், சென்னை - 83. ✆: 2371 8706**

www.padippakam.com

# பெட்ரோலியப் பொருள் விலையேற்றம்

# அம்பானியின் சேவையில் அரசு

பெட்ரோலியப் பொருட்களின் விலையை மீண்டும் மூன்றாவது முறையாக உயர்த்தியிருக்கிறது ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி. சர்வதேச சந்தையில் ஒரு பாரல் கச்சா எண்ணெயின் விலை ஐம்பது அமெரிக்க டாலர்களைத் தாண்டிவிட்டதால், இந்த விலை உயர்வு தவிர்க்க முடியாதது என விளக்கமும் அளித்திருக்கிறது, மைய அரசு.

இந்த விலை உயர்வு அறிவிக்கப்பட்ட சில நாட்களிலேயே, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை சரிந்தது. அதற்கு ஏற்ப பெட்ரோலின் விலையை மட்டும் கொஞ்சம் குறைத்த மைய அரசு, டீசல், சமையல் எரிவாயுவின் விலையைக் குறைக்க மறுத்துவிட்டது. எனவே, இந்த விலையேற்றத்தின் பின்னுள்ள நோக்கம், டீசல், சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய்க்கு வழங்கப்படும் 'மானியத்தை' ஒழித்துக் கட்டுவதுதான். இந்த அடிப்படையில்தான், சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை இனி மாதா மாதம் ஐந்து ரூபாய் வீதம், 31 மாதங்களுக்கு உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த விலையேற்றத்திற்கு மக்கள் மத்தியில் எழுந்துள்ள கடும் அதிருப்தியையடுத்து, சமையல் எரிவாயுவின் விலையை மாதாமாதம் உயர்த்தும் முடிவை மைய அரசு கைகழுவி விட்டது. எனினும், அடுத்த சில மாதங்களிலேயே, மீண்டும் சர்வதேச சந்தையைக் காரணம் காட்டி இதன் விலையை உயர்த்த மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது.

உள்நாட்டில் பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்த சர்வதேச சந்தையைக் காரணம் காட்டும் மைய அரசு, என்ன காரணத்தினால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்து கொண்டே போகிறது என்பது பற்றி வாயே திறக்கவில்லை. இதைப் பற்றிப் பேசினால், அமெரிக்காவின் எண்ணெய் அரசியல் அம்பலப்பட்டுப் போகும் என்பதனாலேயே மௌனம் காக்கிறது.

எண்ணெய் உற்பத்தியில் மேற்காசிய நாடுகளுக்கு அடுத்து, முக்கியமான இடத்தில் இருக்கும் நாடு தென்னமெரிக்காவில் உள்ள வெனிசுலா. இந்த நாட்டின் அதிபராக இருக்கும் சாவேஸ், வெனிசுலாவின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையீடு செய்வதை எதிர்த்து வருகிறார். இதனால் அமெரிக்கா அந்நாட்டைச் சேர்ந்த அமெரிக்க சார்பு எதிர்க் கட்சிகளைத் தூண்டிவிட்டு, அந்நாட்டின் எண்ணெய் உற்பத்தியை முடமாக்கி வருகிறது. இதன் மூலம் வெனிசுலாவின் பொருளாதாரத்தை முடக்கி, சாவேஸைப் பணிய வைத்துவிடலாம் என்ற திட்டத்தோடு பல அரசியல் சதி வேலைகளை நடத்தி வருகிறது, அமெரிக்கா.

ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள நைஜீரியா நாட்டின் எண்ணெய் வளத்தைத் தங்களின் பிடிக்குள் வைத்திருக்கும் ஷெல் மற்றும் செவ்ரான் என்ற இரு தேசங் கடந்த எண்ணெய் நிறுவனங்கள்தான், அந்நாட்டை ஆண்டு வரும் இராணுவ சர்வாதிகாரக் கும்பலையும் தாங்கிப் பிடித்து வருகின்றன. இப்பொழுது, அந்நாட்டில் நடந்துவரும் உள்நாட்டு கலவரங்களை காரணம் காட்டி, கச்சா

**பெட்ரோல் விலை உயர்வைக் கண்டித்து இடது, வலது கம்யூனிஸ்டுகள் இணைந்து சென்னையில் நடத்திய ரயில் மறியல் (மேல்படம்); ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. நடத்திய ஆர்ப்பாட்டம்: பூனைக்கும் தோழன்; பாலுக்கும் காவல்!**





படிப்பகம்

எண்ணெய் உற்பத்தியைக் குறைத்து விட்டன.

ஈராக்கில் சதாம் ஹுசேன் ஆட்சியில் இருந்தபொழுதே, அந்நாட்டின் எண்ணெய் உற்பத்திக்குப் பல கட்டுப்பாடுகளை ஐ.நா. மன்றம் மூலம் விதித்திருந்தது, அமெரிக்கா. பிறகு, அந்நாட்டு எண்ணெய் வயல்களைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கத்தோடு ஆக்கிரமிப்புப் போரை நடத்தியது. பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாக, இந்த ஆக்கிரமிப்புப் போர் ஈராக்கின் எண்ணெய் உற்பத்தியை ஏறக்குறைய முடமாக்கி, உள்நாட்டிலேயே தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விட்டது.

> **கடந்த பத்தாண்டுகளில் மாருதி காரின் விலை உயரவேயில்லை; உணவுப் பொருட்களின் விலையோ 140 சதவீதம் அதிகரித்து இருக்கிறது. தனியார்மயம் - தாராளமயம் என்ற பொருளாதார அமைப்பே தலைகீழானதாக இருக்கிறது என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.**

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கு இந்த உற்பத்தி முடக்கம் ஒரு காரணம் என்றால், கச்சா எண்ணெய் வியாபாரத்தில் நடந்து வரும் சட்டபூர்வ பதுக்கல் இன்னொரு முக்கிய காரணம். குறிப்பாக, அமெரிக்கா ''அவசரகால சேமிப்பு'' என்ற பெயரில் தனது தேவைக்கு அதிகமான எண்ணெயைப் பகிரங்கமாகவே ''பதுக்கி'' வைத்திருக்கிறது.

மேலும், பன்னாட்டு நிதி நிறுவனங்கள் பங்குச் சந்தையில் முதலீடு செய்து சூதாடுவதைவிட, எண்ணெய் வியாபாரத்தில் இறங்கி சூதாடுவதைத்தான் இப்பொழுது பாதுகாப்பாகக் கருதுகின்றன. பன்னாட்டு பரஸ்பர நிதி நிறுவனங்களும் **(Mutual Funds)**, பங்குச் சந்தை காப்பீடு நிறுவனங்களும் **(Hedge Funds)** எண்ணெய் வியாபாரத்தில் நுழைந்து நடத்தும் சூதாட்டம்தான், இந்த விலை உயர்வுக்கு மிக மிக முக்கியமான காரணம் என்று கூறப்படுகிறது.

ஒரு செயற்கையான விலையேற்றத்திற்கு இந்திய மக்களைப் பலியிட்டிருக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, ''விலையை உயர்த்தாமல் விட்டிருந்தால் எண்ணெய் நிறுவனங்களுக்கு 20,000 கோடி ரூபாய் நட்டமேற்பட்டிருக்கும்'' எனப் பூச்சாண்டி காட்டுகிறது. பெட்ரோலியப் பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கும் இலாபம் போக, அவற்றின் மீது விதிக்கப்படும் கலால் வரி, சுங்க வரி, விற்பனை வரி ஆகியவற்றின் மூலம் மட்டும் மைய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் ஒரு இலட்சம் கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. மைய அரசு இந்த வரி விதிப்பைக் குறைத்துக் கொண்டாலே, டீசல், சமையல் எரிவாயுவின் விலைகளை உயர்த்த வேண்டிய அவசியமே இருந்திருக்காது.

ஆனால், மைய அரசோ, ஏற்கெனவே 4,400 கோடி ரூபாய்க்கு வரிகளைக் குறைத்துவிட்டதால், இனியும் வரிகளைக் குறைக்க முடியாது எனக் கையை விரித்து விட்டது. இப்பொழுது பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்தியிருப்பதன் மூலம், மைய அரசுக்குக் கூடுதலாக 19,800 கோடி ரூபாய் வரியாகக் கிடைக்கும். ஒரு கையால் கொடுப்பது போலக் கொடுத்து, இன்னொரு கையால் கொடுத்ததைவிடக் கூடுதலாகத் தட்டிப் பறித்துவிட்டது, மைய அரசு.

இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் மீது விதிக்கப்படும் கலால் வரியை மட்டும் மைய அரசு நீக்கினால், டீசல், சமையல் எரிவாயு, பெட்ரோல் விலைகள் அனைத்தும் ஏறத்தாழ சரிபாதியாகக் குறைந்துவிடும். மைய அரசு இந்த வரியை நீக்கக் கூட வேண்டாம்; குறைக்கக் கூட முடியாது எனப் பிடிவாதம் பிடிப்பதற்கு அரசின் வருமானம் போய்விடும் என்பதைவிட, ரிலையன்ஸ் அம்பானியின் இலாபம் குறைந்து போய்விடும் என்ற கரிசனம் தான் காரணம். பெட்ரோலியத் துறை அமைச்சர் மணிசங்கர் அய்யர், ''ஏற்கெனவே 4,400 கோடி ரூபாய் வரிச் சலுகை அளித்தபோது, ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு 700 கோடி ரூபாய் நட்டமேற்பட்டது'' என வெளிப்படையாகவே புலம்பியிருக்கிறார். இவர் மக்களுக்குப் பதில் சொல்ல கடமைப்பட்ட மந்திரியா? இல்லை, ரிலையன்ஸின் தரகனா?

வெளிநாட்டில் இருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யும் ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு, 1,300 கோடி ரூபாய் அளவிற்கு இறக்குமதி வரிச் சலுகைகளை அளித்திருக்கிறார், நிதியமைச்சர் ப. சிதம்பரம். அதேசமயம், டீசல், சமையல் எரிவாயு விலைகளைக் குறைக்க வரிகளைக் குறைக்கலாமே எனச் சொன்னால் ''வரிகளைக் குறைத்துவிட்டால், வேலைக்கு உணவுத் திட்டம்; வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம் ஆகிய சமூக நலத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்க முடியாது'' என நொண்டிக் காரணத்தைச் சொல்கிறார். சமூக நலத்திட்டங்களை நிறைவேற்ற மக்களின் தாலியை அறுப்போமே தவிர, அம்பானியின் மடியில் கைவைக்க மாட்டோம் என்பதுதான் ப.சி.யின் பொருளாதாரக் கொள்கை.

கடந்த பத்தாண்டுகளில் மாருதி 800 என்ற காரின் விலை உயரவேயில்லை; வேறு பல இரக கார்களின் விலைகள் சரிந்து விழுந்திருக்கின்றன. அதேசமயம், உணவுப் பொருட்களின் விலையோ 140 சதவீதம் அதிகரித்திருக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு சர்வதேச சந்தை, பணவீக்கம் எனக் காரணம் கற்பிக்கப்படுகிறது; ஆனால், இந்தப் பணவீக்கமும், சர்வதேச சந்தையும் கார், டி.வி போன்ற ஆடம்பரப் பொருட்களின் விலையைப் பதம் பார்ப்பதில்லையே, அது ஏன்?

தனியார்மயம் - தாராளமயம் என்ற பொருளாதார அமைப்பே தலைகீழானதாக, மக்களுக்கு எதிரானதாக இருக்கிறது என்பதைத்தான் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் எடுத்துக்காட்டுகிறது. இதை ஒழித்துக் கட்டாமல், விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியாது. பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வை எதிர்த்துப் போராடுவதாகக் காட்டிக் கொள்ளும் எந்தவொரு ஓட்டுக்கட்சியாவது, அம்பானியை அம்பலப்படுத்த முன் வந்ததா? மாறாக, ஓட்டுக் கட்சிகள் மனித முகத்துடன் தனியார்மயத்தை அமல்படுத்த வேண்டும் எனப் பசப்புகின்றன. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் காங்கிரசு கட்சிகூட, மனித முகம் கொண்ட தாராளமயத்தைப் பற்றிதான் பேசியது. ஆனால், பெட்ரோலிய விலை உயர்வு, அது ஒரு மோசடித்தனம் என்பதை மீண்டும் அம்பலப்படுத்தி விட்டது.

● செல்வம்

# அமெரிக்கத் தேர்தல்:
# மீண்டும் சர்வதேச பயங்கரவாதி ஜார்ஜ் புஷ்!

அமெரிக்க அதிபர் தேர்தலின் பொழுது, ஜார்ஜ் புஷ்ஷை, ''முட்டாள்'', ''கோமாளி'' எனப் பரிகாசம் செய்து நூற்றுக் கணக்கான தேர்தல் விளம்பரங்கள் வெளிவந்தன. ஜார்ஜ் புஷ் முட்டாள் மட்டுமல்ல; கிறித்தவ மத வெறியன், போர்வெறி பிடித்த பாசிஸ்டு என்பதும் உலகறிந்த உண்மை. எனினும், உலகமே வெறுத்து ஒதுக்கிய இந்த மனிதகுல விரோதிதான் அமெரிக்காவின் அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ஜார்ஜ் புஷ்ஷின் ஆட்சியில் அமெரிக்க மக்களின் வாழ்க்கைத் தரம், 1955-ஆம் ஆண்டில் எந்தளவிற்கு இருந்ததோ, அந்தளவிற்குச் சரிந்து விழுந்தது. அமெரிக்க முதலாளிகளுக்குப் பல வரிச் சலுகைகளை வழங்கிய புஷ், தொழிலாளர்களின் குறைந்த பட்சக் கூலியைக் கூட்ட மறுத்துவிட்டார். வேலையில்லாத் திண்டாட்டம், வேலை நீக்கம் என்ற இரு தாக்குதல்கள் ஒரே சமயத்தில் தொழிலாளர்கள் மீது தொடுக்கப்பட்டன. இப்படி பல காரணங்களால் புஷ்ஷின் ஆட்சி மீது அதிருப்தி இருந்தபோதும், அவர் 35 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் அதிபர் பதவியைக் கைப்பற்றி விட்டார்.


மத அடிப்படைவாதம் / மதவெறி என்பது முசுலீம்களோடும், முசுலீம்கள் நிறைந்துவாழும் மேற்காசிய நாடுகளோடும் மட்டுமே ஒரு சார்பாக இணைத்துப் பேசப்படுகிறது. ஆனால், புஷ்ஷின் வெற்றி, அமெரிக்கா கிறித்தவ மதவெறியர்கள் நிறைந்த நாடு என்பதை அம்பலப்படுத்தியிருக்கிறது. மதவெறி / மத அடிப்படைவாதம் ஆட்சியில் பங்கு போட்டுக் கொள்ள, ஏதோ ஒரு வகையான சர்வாதிகார ஆட்சி இருக்க வேண்டிய அவசியமில்லை. நாடாளுமன்ற ஜனநாயகமும் அதற்கு இடமளிக்கும் என்பதையும் நிரூபித்திருக்கிறது.

ஜார்ஜ் புஷ் கும்பல், அதிபர் பதவியை மீண்டும் கைப்பற்றுவதற்காக இரண்டு பீதிகளை உருவாக்கியது. ''அமெரிக்க ஜனநாயகத்திற்கு, வாழ்க்கை முறைக்கு தீவிரவாதிகளால் ஆபத்து'' என்பது ஒன்று. இதன் மூலம், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்க அரசு நடத்திவரும் ஆக்கிரமிப்பு போர்களை நியாயப்படுத்தியதோடு, தேசியவெறியையும், ஏகாதிபத்திய போர்வெறியையும் வாக்காளர்கள் மத்தியில் தூண்டி விட்டது. தேர்தல் நெருங்கிய சமயத்தில், பின்லேடன் பெயரில் வெளியிடப்பட்ட அமெரிக்காவுக்கு எதிரான அறிக்கை ஜார்ஜ் புஷ்ஷுக்கு மேலும் சாதகமாக அமைந்தது.

''பெண்ணியவாதிகள், கருத்தடை ஆதரவாளர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள் - இவர்கள் அனைவருமே கடவுளுக்கு எதிரானவர்கள். இவர்களால் அமெரிக்க நீதி நெறிமுறைக்கு ஆபத்து'' என்பது புஷ் கிளப்பி விட்ட மற்றொரு பீதி. இதன்மூலம் கிறித்தவ மதவெறியர்களின் ஓட்டுக்களைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார், ஜார்ஜ் புஷ். இந்த கிறித்தவ மதவெறி பிரச்சாரம்தான் அவரது வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

கிறித்தவ மத போதனைகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட, இரண்டு கோடி புரொடெஸ்டெண்ட் கிறித்தவர்களின் வாக்குகளை வளைத்துப் போடும் முயற்சியை ஜார்ஜ் புஷ் கும்பல் 2000-ஆம் ஆண்டே தொடங்கி விட்டது. கிறித்தவ மதச் சடங்குகளோடு நடைபெறும் திருமணங்களை ஊக்குவிப்பதற்காக, தேவாலயங்களுக்கு அரசின் நிதியுதவி அளிக்கப்பட்டது; மக்கள் தொகை கட்டுப்பாடு மற்றும் பாலினப் பிரச்சினைகளுக்காக நடத்தப்பட்ட ஐ.நா. மாநாடுகளுக்கு கிறித்தவ மத வெறிக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன; கருத்தடையை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யும் குழுக்களுக்கு அரசின் நிதியுதவி நிறுத்தப்பட்டது; கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள மோஜாவே பாலைவனத்தில், ஒரு பிரம்மாண்டமான சிலுவையை அரசே கட்டிக் கொடுத்தது.

''நீ ஒரே சமயத்தில் கத்தோலிக்க கிறித்தவனாகவும், கருக்கலைப்பை ஆதரிப்பவனாகவும் இருக்க முடியாது'' என்ற முழக்கத்தை முன் வைத்து கிறித்தவ மதவெறியர்களால் நடத்தப்படும் ஊர்வலம்.




ஜார்ஜ் புஷ் மத நம்பிக்கை கொண்டவராக மட்டுமல்ல; கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் முன்னிறுத்தப்பட்டார். ஒரு தேவாலய ஆராதனைக் கூட்டத்தில் பேசிய பாதுகாப்பு அமைச்சகத்தின் துணைச் செயலர், ''2000-இல் நடந்த தேர்தலின்பொழுது, பெரும்பான்மையான அமெரிக்கர்கள் புஷ்ஷுக்கு வாக்களிக்கவில்லை. பிறகு ஏன் அவர் வெள்ளை மாளிகையில் இருக்கிறார்? இந்த மாதிரியான நேரத்தில் அவர் வெள்ளை மாளிகையில் இருக்க வேண்டும் என்பது கடவுளின் சித்தம்'' என அவிழ்த்து விட்டார்.

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்

www.padippakam.com



# ரிலையன்ஸ்: மோசடியே மூலதனம் ஆட்சியாளர்களே பக்கபலம்

**கொ**லைகார காஞ்சி சங்கராச்சாரி நேரில் சென்று சதியாலோசனை செய்யுமளவுக்குப் புகழ்பெற்ற குபேர முதலாளிகளில் ஒருவர் காலஞ்சென்ற திருபாய் அம்பானி. சாதாரண குமாஸ்தாவாக இருந்து மோசடிகளால் கோடீசுவரரான அம்பானி உருவாக்கிய நிறுவனம்தான் ரிலையன்ஸ். அம்மோசடி முதலாளியின் வாரிசுகளான முகேஷ் அம்பானியும், அனில் அம்பானியும் உருவாக்கிய மோசடி நிறுவனம்தான் ரிலையன்ஸ் இண்டியா மொபைல் (RIM) என்ற செல்போன் நிறுவனம்.

கடந்த அக்டோபர் முதல் வாரத்தில் ரிலையன்ஸ் செல்போனுக்கும் அரசுத் துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல்.-க்கும் இடையிலான இணைப்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன. ஏதோ தொழில்நுட்பக் கோளாறாக இருக்கும் என்றுதான் பலரும் கருதினர். ஆனால், இணைப்பை வேண்டுமென்றேதான் பி.எஸ்.என்.எல். துண்டித்தது. ஏனெனில், தங்களுக்கு வரவேண்டிய பல்லாயிரம் கோடி ரூபாயை ரிலையன்ஸ் மோசடி செய்துள்ளதாகவும், அதனாலேயே இணைப்பு துண்டிக்கப்பட்டதாகவும் பி.எஸ்.என்.எல். பகிரங்கமாகக் குற்றம் சாட்டியது. அது என்ன மோசடி என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பாக, தொலைதொடர்புத் துறையில் நுழைந்த தனியார் நிறுவனமான ரிலையன்ஸ், தொடக்க காலத்திலிருந்தே செய்து வந்த மோசடிகளையும், நாட்டு விரோத - மக்கள் விரோத நடவடிக்கைகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

தொலை தொடர்புத் துறையை தனியார்மயமாக்குவதென ஆட்சியாளர்கள் முடிவெடுத்த பின்னர் அதன் சேவைகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன. 1. அடிப்படை அல்லது சாதாரண தொலைபேசி சேவை, 2. செல்லுலர் எனப்படும் மொபைல் சர்வீஸ், 3. தேசிய டிரங்க் சேவை. இந்த மூன்று சேவைகளுக்கும் தனித்தனியே உரிமம், நுழைவுக் கட்டணம், விதிமுறைகள் வரையறுக்கப்பட்டன. இதன்படி ஒரு சேவைக்கு உரிமம் வாங்கியவர்கள் மற்ற சேவைகளைத் தர முடியாது. அடிப்படை சேவைக்கான உரிமம் பெற்றவர்கள் ''வில்'' (wireless line in local loop) என்ற கம்பியில்லா தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. இது செலவு குறைந்த தொழில்நுட்பம். சாதாரண தொலைபேசி சேவையில், சந்தாதாரர்களின் தொலைபேசி இணைப்புச் செலவைக் குறைப்பதற்காக இது அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி விநியோக முனை வரை கம்பி பதித்தால் போதும். சந்தாதாரரின் தொலைபேசி இணைப்புகளுக்கு கம்பி இணைப்புகள் தேவையில்லை. சுற்று வட்டாரம் முழுவதும் இத்தகைய தொழில் நுட்பத்தால் சந்தாதாரர்கள் பயனடைய முடியும். மேலும், சாலை வசதிகளைச் சந்திக்க முடியாத கிராமப்புறங்கள், மலைவாழ் மக்கள் உள்ள பகுதிகள் ஆகியவற்றுக்கும் குறைந்த செலவில் தொலைபேசி இணைப்புகள் தரமுடியும்.

இந்தத் தொழில்நுட்பம் எந்த வகையிலும் வியாபார நோக்கத்திற்காக மாறிவிடக் கூடாது என்பதற்காக தேசிய தொடர்புக் கொள்கை கறாரான விதிகளுடன் வகுக்கப்பட்டது. இதன்படி, சாதாரண தொலைபேசி சேவைக்கு அனுமதி வாங்கிய தனியார் நிறுவனங்கள் செல்லுலர் சேவை தரக்கூடாது; சாதாரண தொலைபேசி சேவையில் மட்டும் ''வில்'' (WLL) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும், இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாலே ''மொபைல்'' தொலைபேசிகளைப் பயன்படுத்தக் கூடாது. இந்த நிலையை உறுதி செய்யவே செல்லுலர் சேவைக்கென்று ''ஜிஎஸ்எம்'' (GSM) என்ற தனிதொழில்நுட்பத்தை வரையறுத்து அதிலேயே உரிமமும் கொடுக்கப்பட்டது. இவையெல்லாம் ஒழுங்காக நடைபெறுவதைக் கண்காணிக்க ஒழுங்குமுறை ஆணையம் (TRAI); இவற்றில் பிரச்சினை வந்தால், முறைகேடுகளை விசாரிக்கை தொலை தொடர்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (TDSAT), பொதுத் துறை பங்குகளை விற்பதற்கென்றே தனி அமைச்சகம் என்று ஏராளமான அமைப்புகள் மக்கள் வரிப்பணத்தில் அமைக்கப்பட்டன.

ஆனால், ரிலையன்ஸ் நிறுவனமோ, நாடு முழுவதும் ''ரோமிங்'' மற்றும் சிறப்பு சேவைகளான ஆடியோ, வீடியோ, செய்தி அனுப்பும் வசதி ஆகியவற்றோடு ஒரு செல்போனுடன் கூடிய முழு செல்லுலர் சேவையை குறைந்த கட்டணத்தில் தரப் போவதாக ஆரவாரமாக

**பல வியாபார மோசடிகளை நடத்தியுள்ள ரிலையன்சிற்கு, ''மிகவும் மதிப்பிற்குரிய நிறுவனம்'' என்ற பரிசுக் கோப்பையை அதன் துணைத் தலைவர் அனில் அம்பானியிடம் கொடுக்கிறார், ப.சிதம்பரம்.**





படிப்பகம்

www.padippakam.com

விளம்பரப்படுத்தி, இலட்சக்கணக்கில் சந்தாதாரர்களைச் சேர்க்கத் தொடங்கியது. இதை எதிர்த்து செல்லுலர் சேவைக்கென்று உரிமம் பெற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு (COAI), மேல்முறையீட்டு ஆணையத்திடம் முறையிட்டது. உச்ச நீதி மன்றத்திலும் மனு செய்யப்பட்டது.

இப்படி பிரச்சினைகள் இருக்கும் போதே, டிசம்பர் 26, 2002-இல் ரிலையன்ஸ் நிறுவனம், செல்லுலர் சேவைக்கென்று உரிமம் இல்லாமலேயே கோலாகலமான மிகப் பெரிய விழா எடுத்து நாடு முழுவதற்குமான சட்ட விரோதமான செல்லுலர் சேவையைத் தொடங்கியது. இந்த மோசடி சேவையைத் தொடங்கி வைத்தவர், அப்போதைய தொலைதொடர்பு அமைச்சர் பிரமோத் மகஜன். முதல் சட்டவிரோத அழைப்பைப் (call) பெற்றவர், அப்போதைய பிரதமர் வாஜ்பாய். இதே காலகட்டத்தில், தனியார்துறையை ஊக்குவிப்பதற்கென்றே அரசுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல்.-இன் 15 இலட்சம் "வில்" (WLL) தொலைபேசி இணைப்புகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அடுத்த சில மாதங்களில் ரிலையன்ஸ் பயன்படுத்தும் தொழில்நுட்பம் குறித்த வேறொரு வழக்கில் தொலைதொடர்பு மேல்முறையீட்டு ஆணையம் (TDSAT) தீர்ப்பளிக்கும்போது, "தொலைதொடர்புத் துறையும் அரசாங்கமும் ரிலையன்ஸ் வியாபாரத்தைத் தடுக்காமல் வேடிக்கை பார்ப்பதாக" வெளிப்படையாக விமர்சித்தது.

இதன் பிறகாவது, ரிலையன்ஸ் நிறுவனம் சட்டவிரோதமாகச் செயல்பட்டதற்காகவும், மோசடிகளில் ஈடுபட்டதற்காகவும் வழக்கு பதிவு செய்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் அதன் உரிமத்தை ரத்து செய்து, அதன் நடவடிக்கைகளை முடக்கியிருக்க வேண்டும். ஆனால், இவை எவையும் நடக்கவில்லை. இந்த மோசடி மூலம் ரூ. 10,000 கோடிக்கும் மேலாக ரிலையன்ஸ் நிறுவனம் கொள்ளையடித்திருப்பதாக, பா.ஜ.க. ஆட்சியிலிருந்த போதே அதன் பொருளாதாரக் கொள்கைப் பிரச்சாரகரான குருமூர்த்தி புலம்பினார். ஆனாலும் தொலைதொடர்புத் துறை ரிலையன்ஸ் மீது வெறும் 500 கோடி மட்டுமே அபராதம் விதித்தது.

இதற்கிடையில், செல்லுலர் உரிமம் பெற்ற நிறுவனங்கள் தமது "நெட்வொர்க்"கில் ரிலையன்சின் அமைப்புகளை அனுமதிக்க மறுத்தன. அரசாங்க ஆதரவோடு கொள்ளையடித்து வந்த ரிலையன்ஸ் நிறுவனம், இப்போது



**கமிசன் தொகையைக் கொடுக்காமல் ஏய்ப்பம் விட்ட ரிலையன்சை எதிர்த்து, ரிலையன்ஸ் மொபைல் போன் டீலர்கள் நடத்திய உண்ணாவிரதம்.**

தான் பாதிப்புக்குள்ளாக ஆரம்பித்தது. பீதியடைந்த ரிலையன்ஸ் நிறுவனத்தை ஆறுதல்படுத்திய பா.ஜ.க. அரசு, யாமிருக்க பயமேன் என்று ரிலையன்சின் மோசடிக்கு ஒரு சட்டபூர்வ அந்தஸ்தை வழங்கியது. இதன்படி, ஒரு சேவைக்கான உரிமம் வாங்கியிருந்தாலே போதும்; தொலைதொடர்புத் துறையின் அனைத்து சேவைகளையும் வழங்கலாம் என்று அறிவித்தது. இதற்குப் பெயர் ஒருங்கிணைந்த உரிமம் (unified licence) என்று கூறியது. 2003 அக்டோபரில்தான் இந்த அறிவிப்பு வெளியானது என்ற போதிலும், ரிலையன்ஸ் நிறுவனம் என்றைக்கு உரிமம் வாங்கியதோ அன்றிலிருந்தே நடைமுறைக்கு வந்ததாக முன் தேதியிட்டு செயல்படுத்த உத்திரவிட்டது.

ரிலையன்ஸ் என்ற ஒரு தனியார் நிறுவனத்தின் சட்டவிரோதக் கொள்ளை - மோசடிகளை மூடிமறைத்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கைகட்டி நின்ற பா.ஜ.க. அரசு, அதன் கொள்ளையையும், மோசடிகளையும் சட்டபூர்வமாகவே அங்கீகரித்து ஆதரவாக நின்றது. இதுமட்டுமின்றி, நமது வரிப்பணத்திலிருந்து கோடிகோடியாய் சலுகைகளையும் வாரி இறைத்துள்ளது.

செல்போன்களைப் பொறுத்தவரை வெளிநாட்டு போன்களுக்கு விற்பனை வரி 20 சதவீதமாகவும், உள்நாட்டுப் போன்களுக்கு 12 சதவீதமாகவும் இருந்தது. மொபைல் சேவையில் செல்போனையும் கூடவே தருவதாக ரிலையன்ஸ் அறிவித்தவுடன் மொத்த செல்போன்களின் விற்பனை வரியையும் 4 சதவீதமாக பா.ஜ.க. அரசாங்கம் குறைத்து விட்டது. இதன்மூலம் அரசுக்கு பல ஆயிரம் கோடிகள் வருவாய் இழப்பு! ரிலையன்ஸ்-க்கோ கொள்ளை கொள்ளையாய் லாபம்!

500 ரூபாய் கொடுத்தால், உடனடியாக இணைப்புடன் கூடிய செல்போன் என்று இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைப் பெற்ற ரிலையன்ஸ்-க்கு சந்தாதாரர்களிடமிருந்து பாக்கியை வசூலிக்க ஏஜெண்டுகளை நியமித்தும் கூட வசூலாகவில்லை. எனவே ஒரு புதிய மோசடி வழியைக் கண்டுபிடித்தது. பொதுத்துறையான காப்பீடு கழகத்தில் தனக்கு வரவேண்டிய பாக்கியை வாடிக்கையாளர்கள் கட்டாவிட்டால், அதற்கு ஈடாக காப்பீடு கழகம் பணம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில், தனது இணைப்புகளை இன்சூரன்ஸ் செய்து அற்ப தொகையை கட்டணமாகச் செலுத்தியது. வரவேண்டிய பாக்கிக்காக ரூ. 150 கோடியை காப்பீடு நிறுவனத்திடமிருந்து வாங்கிக் கொண்டுள்ளது. தன்னை நிலைநிறுத்திக் கொள்ள ரிலையன்ஸ் எப்படியெல்லாம் மக்கள் சொத்தைச் சூறையாடும் என்பதற்கு இதுவே சாட்சி.

எல்லாவற்றுக்கும் மேலாக, வெளிநாட்டு அழைப்புகளை உள்நாட்டு அழைப்புகளாகக் காட்டி பல்லாயிரம் கோடிகளை ரிலையன்ஸ் மோசடி செய்துள்ளது. பி.எஸ்.என்.எல்.-இன் "நெட்வொர்க்"கைப் பயன்படுத்திக் கொள்ளை லாபமீட்டி வரும் தனியார் தொலைதொடர்பு நிறுவனங்கள், அதில் ஒரு சிறு பகுதியை பி.எஸ்.என்.எல்.-க்கு கட்டணமாகச் செலுத்த வேண்டும். உள்ளூர் மற்றும் உள்நாட்டு அழைப்புகளுக்கு 30 பைசா முதல் ரூ. 1.15 வரையும், வெளிநாட்டு அழைப்புகளுக்கு ரூ. 4.50-ம் செலுத்த வேண்டும். இதில்தான் ரிலையன்ஸ், தோலிருக்க சுளை முழுங்கும் தனது கைவரிசையைக் காட்டியுள்ளது.

வெளிநாட்டு அழைப்புகளை உள்நாட்டுக்குள் கொண்டுவர நாடெங்கும் 400 முனைகளை ரிலையன்ஸ் வைத்துள்ளது. இந்த முனைகளில் மொத்தம்

படிப்பகம்

www.padippakam.com

30,000 போலி எண்களை வைத்துக் கொண்டது. வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகள் இந்த முனைகளைக் கடக்கும் போது, இந்தப் போலி எண்களில் ஒன்றைப் பெற்றுக் கொண்டு, வெளிநாட்டிலிருந்து, வந்த சுவடு தெரியாமல் உள்நாட்டு அழைப்பைப் போலவே இணைக்கப்பட்டு விடும். ரூ. 4.50 செலுத்தவேண்டிய இத்தகைய அழைப்புகளை உள்நாட்டு அழைப்புகளாகக் காட்டி வெறும் 30 பைசா மட்டுமே பி.எஸ்.என்.எல்.-க்கு ரிலையன்ஸ் செலுத்தும்.

இதன் மூலம் பல்லாயிரம் கோடிகளை ரிலையன்ஸ் விழுங்கி ஏப்பம் விட்டுள்ளது. இந்த மோசடியிலுள்ள பேரபாயம் என்னவென்றால், வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகளின் எண்களும், அவை எங்கிருந்து வருகின்றன என்பதும் மறைக்கப்படுகிறது. இது இரகசிய உலகப் பேர்வழிகளும் தேச விரோத மக்கள் விரோத கிரிமினல் மாஃபியா கும்பல்களுக்கே சாதகமாக அமையும்.

ரிலையன்ஸ் தொலைதொடர்பு நிறுவனம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து நடந்துவரும் இந்த மோசடி, கடந்த சில மாதங்களுக்கு முன்புதான் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே சென்னை பி.எஸ்.என்.எல். நிர்வாகம் டெல்லி தலைமையகத்துக்கு அறிவித்துவிட்டு ரிலையன்ஸ் நிறுவனத்துடனான இணைப்புகளைத் துண்டித்தது.

ஆனாலும் ரிலையன்ஸ் மீது மோசடி குற்றத்திற்காகவோ, கிரிமினல் குற்றத்திற்காகவோ எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. கொள்ளையடித்த ரிலையன்ஸ் முதலாளிகளும் நிர்வாகிகளும் கைது செய்யப்படவில்லை. அதற்கு மாறாக, அபராதம் கட்டி அங்கீகாரம் பெறச் சொல்கிறது இன்றைய காங்கிரசு ஆட்சி. இந்த மோசடி மூலம் பல்லாயிரம் கோடிகளைக் கொள்ளையடித்த ரிலையன்சுக்கு விதிக்கப்பட்ட அபராதமோ வெறும் 60 கோடி ரூபாய்தான்.

அரசாங்கத்தையே மோசடி செய்யும் ரிலையன்ஸ், தனது ஊழியர்களிடம் மட்டும் நேர்மையாக நடக்குமா என்ன? செல்போன் சந்தாதாரர்களைப் பிடித்துத் தரும் வேலைபார்த்த மார்க்கெட்டிங் முகவர்களுக்கு அதற்குரிய தரகுத் தொகையைத் தராமல் பட்டை நாமத்தைப் போட்டுவிட்டது. ரிலையன்ஸ் தங்களை மோசடி செய்துவிட்டதாக அவர்கள் இப்போது வீதிக்கு வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பானை சோற்றைப் பதம் பார்த்தாற் போல தனியார்மய - தாராளமயக் கொள்கையால் பலிகடாவாக்கப்படும் அரசுத்துறைக்கு இன்னுமொரு சான்றுதான் பி.எஸ்.என்.எல். ரிலையன்சின் பகற்கொள்ளை - மோசடிகளை அம்பலப்படுத்தி, அதன் உரிமத்தை ரத்து செய்து மோசடி செய்த பல்லாயிரம் கோடிகளைப் பறித்தெடுக்கவும், இம் மோசடிகளுக்குத் துணை நின்ற அதிகாரிகள் - அரசியல்வாதிகளைத் தண்டிக்கவும் கோரி பி.எஸ்.என்.எல். ஊழியர்கள் உறுதியான போராட்டத்தைத் தொடுக்காவிடில், அரசுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல்.-ஐக் காப்பாற்ற முடியாது. தனியார்மய - தாராளமயத்தால் அழிக்கப்பட்டு வரும் இதர அரசுத் துறை, சேவைத்துறை ஊழியர்களுடனும் உழைக்கும் மக்களுடனும் ஐக்கியத்தைக் கட்டியமைக்காமல் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் முடியாது.

**(திருச்சி தொலைதொடர்பு ஊழியர் சங்க இதழான ''பாட்டாளி வர்க்கப் போராளி'' வெளியிட்டுள்ள பிரசுரத்தை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.)**

---

23-ஆம் பக்கத் தொடர்ச்சி

எல்லாவற்றுக்கும் மேலாக, புரொடெஸ்டெண்ட் கிறித்தவர்களின் தேசிய சபை, ''அமெரிக்காவின் நலனுக்காக, புரொடெஸ்டெண்ட் கிறித்தவர்கள் தங்கள் சமூகக் கடமையை ஆற்ற வேண்டும்'' என்ற துண்டு பிரசுரத்தை வெளியிட்டு, ஜார்ஜ் புஷ்ஷுக்காக மறைமுகமான வழியில் பிரச்சாரம் செய்தது.

இந்தத் தேர்தலில் வாக்களித்த புரொடெஸ்டெண்ட் கிறித்தவர்களில் 76 சதவீதத்தினர் ஜார்ஜ் புஷ்ஷுக்கு வாக்களித்துள்ளனர். ஜார்ஜ் புஷ்ஷும், அவரது குடியரசுக் கட்சியும் தீவிர வலதுசாரிகளாக இருந்தபோதிலும் அடித்தட்டு வாக்காளர்களில் 42 சதவீதத்தினரும்; அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட தொழிலாளர்களில் 36 சதவீதத்தினரும் புஷ்ஷுக்கு வாக்களித்துள்ளனர். புஷ்ஷின் கேடுகெட்ட ஆட்சிக்கு எதிராகத் திரும்ப வேண்டிய அமெரிக்க மக்களின் கோபம் கிறித்தவ மதவெறியில் மூழ்கடிக்கப்பட்டது.

கிறித்தவ மதவெறிக்கு எதிராக நிறுத்தப்பட்ட பெண்ணியவாதம், கருக்கலைப்பு ஆதரவு, ஓரினச் சேர்க்கை ஆதரவு ஆகிய போக்குகளை, ''மேல்தட்டு பேர்வழிகளின் பண்பாடு'' என அம்பலப்படுத்துவதில் ஜார்ஜ் புஷ் எளிதாக வெற்றி பெற்றார்.

ஜார்ஜ் புஷ்ஷுக்கு எதிராக நின்ற ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜான் கெர்ரி, ''அமெரிக்க முதலாளிகளின் மீது புதிதாக வரி விதிக்க மாட்டேன்; கூடுதலாக 40,000 இராணுவச் சிப்பாய்களை ஈராக்குக்கு அனுப்பி வைப்பேன்'' என புஷ்ஷின் திட்டங்களையே வேறு வார்த்தைகளில் பிரச்சாரம் செய்தார். சட்டபூர்வ எதிர்தரப்பு ஜார்ஜ் புஷ்ஷின் ஏகாதிபத்திய போர்வெறி, கிறித்தவ மதவெறியை அம்பலப்படுத்தக் கூடிய அரசியல் சக்தியாக தேர்தல் களத்தில் நிற்கவில்லை; மாறாக, ''ஈராக் பிரச்சினையில் புஷ் கடுமையாக நடந்து கொள்ளவில்லை'' என அலுத்துக் கொண்டார். இதனால், ஜார்ஜ் புஷ் வரலாறு காணாத வெற்றியைப் பெறுவதற்கு மிகவும் எளிதாக அமைந்தது.

ஜார்ஜ் புஷ் வெற்றி பெற்றவுடனேயே அமெரிக்காவின் உச்சநீதி மன்றம் தொடங்கி நிர்வாகம் முழுவதையும் ஏகாதிபத்திய போர் வெறியர்கள், கிறித்தவ மதவெறியர்களைக் கொண்டு நிரப்பும் பணியைத் தொடங்கிவிட்டார். இதையடுத்து, அமெரிக்க மக்களின் மிச்சமிருக்கும் ஜனநாயக உரிமைகளையும், தனிநபர் சுதந்திரத்தையும்; கருப்பின சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டபூர்வ சலுகைகளையும்; சமூக நலத்திட்டங்களையும் வெட்டிக் குறுக்க முயலுவார். கிறித்தவ மதவெறியில் மூழ்கிக் கிடக்கும் வெள்ளை இனத்தைச் சேர்ந்த நடுத்தர வர்க்கமும், தொழிலாளர்களும் ஜார்ஜ் புஷ்ஷின் இந்தப் பாசிசமயமாக்கலுக்கு சமூக அடித்தளமாக அமைவார்கள்.

தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் ஜார்ஜ் புஷ் நடத்திவரும் ஆக்கிரமிப்பு போருக்கு, இந்தத் தேர்தல் சமூக அங்கீகாரத்தைக் கொடுத்து விட்டது. புஷ் இந்தப் போரை, பிற ஏழை நாடுகளுக்கு விஸ்தரிப்பாரா என்பது, ஈராக்கில் அமெரிக்க இராணுவம் சந்திக்கும் எதிர்ப்பும்; பிற ஏழை நாடுகளில் மறுகாலனி ஆதிக்கத்துக்கு எதிராக நடைபெறும் போராட்டங்களும்தான் தீர்மானிக்கும். மாறாக, அமெரிக்க ஜனநாயகமோ, பிற ஜனநாயக நாடுகளோ இந்தப் போரைத் தடுத்து விடாது!

**● ரஹீம்**

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

சிறையில் இருப்பது தெரியுமா?'' என்றோம். பல பேருக்கு தெரியவில்லை. சிலர், 'அதற்கென்ன இப்ப?' என்பது போல் பார்த்தனர். சிலர் ''எப்புடு? ஏரோஜு?'' (எப்ப? என்னிக்கி) என்று வாயைப் பிளந்தனர்.

பக்தர்களின் வரிசையை ஒழுங்குப்படுத்தும் ஊழியரிடம் ''சங்கராச்சாரி கைதுக்கு ஆர்ப்பாட்டம் எல்லாம் செய்யவில்லையா?'' என்றோம். அவர் நம்மை தீர விசாரித்துவிட்டு, ''முதல் நாள் மட்டும் கறுப்புக் கொடி குத்திக் கொண்டு கண்டனம் தெரிவித்தோம்'' என்றார். ''சங்கராச்சாரியை கிரிமினல் பேர்வழி என்று கோர்ட்டில், அரசு வழக்கறிஞர் சொல்கிறாரே'' என்றோம். ''எல்லாம் அந்த அம்மா (காமாட்சி) பார்த்துக்குவா'' என்றார், அந்த ஊழியர். ''பிறகு ஏன் சங்கராச்சாரியை விடுவிக்கக் கோரி, நீதிமன்றத்தில் ஆர்ப்பாட்டமும், கோயில் சுவரில் நோட்டீசும் ஒட்டியிருக்கிறீர்கள்? 'அம்மா'வுக்கு பிட் நோட்டீஸ் படிக்கிறதுதான் வேலையா?'' என்றோம். அவர், அவசரமாக வேறு வேலை இருப்பதாகச் சென்று விட்டார்.

●●●

**கா**ஞ்சி மடம் கோடிகளில் புரளும் போது, அம்மடத்தின் கீழ் இருக்கும் காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலோ வரலாறு காணாத பஞ்சத்தில்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அம்மன் போர்த்தியிருக்கும் பட்டு புடவை முதல் அம்மன் சன்னதிக்கு போகும் வழியைக் காட்டும் கைகாட்டிவரை அனைத்தையும் 'வழங்கி'யிருப்பது பெரும் தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள்தான்! காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரன் சங்கரமடத்தின் கைகாசைப் போட்டு காமாட்சி அம்மனுக்கு கற்பூரம் கூடக் காட்டவில்லை என்பதுதான் உண்மை! சென்னை குமரன் சில்க்ஸ் முதல் இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மற்றும் பொல ரைஸ் பன்னாட்டு கணினி நிறுவனங்கள் காமாட்சியம்மன் கோயிலில் புல் புடுங்கும் வேலை வரை ஈடுபட்டுள்ளன.

மறுபுறம் சங்கராச்சாரி ஜெயேந்திரனோ, பக்தர்கள் சிறுநீர் கழிக்கும் இடத்தைக் கூட ஏலம் விட்டுக் கட்டண கழிப்பிடமாக்கி கல்லா கட்டுகிறார். ஆதி சங்கரனைப் பற்றி பெருமை பேசும் இந்த ஊத்தவாயன் ஜெயேந்திரன், ஆதி சங்கரனுக்கும் 'அல்வா' கொடுத்து விட்டார்! ஆதி சங்கரனின் 'திரு' உருவத்தை வரைவதற்குக் கூட சங்கரமடத்தின் பணத்தை செலவு செய்யவில்லை! பெரும் கட்டிட ஒப்பந்ததாரர்கள்தான் அதற்கும் 'கைங்கரியம்' செய்துள்ளனர். அவர்களின் கறுப்புப் பணத்தில் வண்ணமயமாக இழைக்கப்பட்டு, ஜொலிக்கும் ''அதிசய ஆதிசங்கரர்'', கையெடுத்து கும்பிடும் பக்தர்களைப் பார்த்துக் குறும்புடன் சிரிக்கிறார்.

அடுத்து, கொலை நடந்த வரதராஜ பெருமாள் கோயிலுக்குச் சென்றோம். கோயில் அருகில் இருக்கும் செட்டித் தெரு சிறுகடை வியாபாரிகளை சந்தித்தோம்! ''ஆர்.ஏ.ஜி. சைக்கிள் ஷாப்'' உரிமையாளர் 54 வயது, சிந்து ஷா என்பவர், ''இவர் (ஜெயேந்திரன்) நடமாடும் தெய்வமல்ல; நடனமாடும் நடிகர்! பணம் கொடுத்தால் ஆடுவார்! இவர், மடத்துல ஆசி வழங்கும்போது பொம்பளைங்க பக்கம்தான் சிரிச்சிகினு இருப்பார். ஆம்பளைங்க பக்கம், திரும்ப மாட்டார்! இதை காஞ்சிபுரமே சொல்லுமே!'' என்றார் உரத்த குரலில். ''இவர் கடவுள் அவதாரம் இல்ல, மடத்து நிர்வாகி; அவ்வளவுதான்'' என்றார்.

ஈகா தையல் கடை உரிமையாளர், 55 வயது ராமச்சந்திரன் என்பவர், ''அவர் (ஜெயேந்திரன்) ஒரு ஜாதி தலைவர்! வேறு எந்த அருளும் அவருக்கு இல்ல! இப்ப... அதுக்கும் (பார்ப்பன சாதி தலைவர்) அவருக்கு அருகதை இல்ல!.. சில்லரைப் புத்தி ஆளு! சொந்த சாதிக்காரனையே உண்மையச் சொன்னதால கொன்னுட்டான்!'' என்று கோபத்துடன் படபடவென்று பேசினார்.

''சங்கராச்சாரியை கைது செய்ததற்கு இந்துக்கள் கொதித்துப் போய் இருப்பதாக, பி.ஜே.பி.யினர் கூறி, ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே என்று நாம் கேட்டதற்கு, பலர் உடனே சூடானார்கள். ''நாங்க சாமிய கும்பிடுறோம். இந்த ஆளயா (ஜெயேந்திரன்) கும்பிடுறோம். சாதாரண மதிப்புக் கூட இந்த ஆளு மேலே எங்களுக்கு இல்ல'' என்றனர்.

கொலை நடந்த வரதராஜ பெருமாள் கோயில் அலுவலகத்திற்குள் சென்று ஊழியர்களிடம் பேசியபோது, ''நாங்கள் சம்பவ சாட்சிகளாக போலீசு விசாரணையில் இருக்கிறோம். வெளியில் எதுவும் சொல்வதற்கு இல்லை'' என்றனர்.

அங்கிருந்து அரை பர்லாங் தூரத்தில் இருக்கும் கொலை செய்யப்பட்ட சங்கரராமன் வீட்டிற்குச் சென்றோம். மிகவும் துயரத்துடன் சோர்வாக அமர்ந்திருந்த சங்கரராமன் மனைவி, மகள், மகன் மூவரிடமும் அறிமுகப்படுத்திக் கொண்டோம். ''பத்திரிக்கை சார்பாக கேள்வி எதுவும் கேட்க வரவில்லை. உங்கள் துயரத்தைப் பகிர்ந்து கொள்ள வந்தோம்'' என்றோம். அவர்கள் நெகிழ்ந்து போனார்கள். பிறகு அவர்களே பல வேதனையான சம்பவங்களைக் கூறினார்கள்.

''தற்போது ஆர்ப்பாட்டம் செய்யும் எவரும் (சங்கராச்சாரி கைதை கண்டித்து) கோயிலுக்குள் நடந்த கொலைக்கு மட்டும் ஏன் கண்டனம் கூட தெரிவிக்கவில்லை என்பது எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. காரணம் அவர், (சங்கரராமன்) ஜாதிக்காரர்கள் (பார்ப்பனர்கள்) போல் மௌனமாக இல்லை என்பதுதான்'' ''எங்களுக்கு ஜாதியா சோறு போட்டது? ரேசன் அரிசிய நம்பித்தான் வாழ்ந்தோம்'' என்றனர். ''ரேசன் கடையில எவாள் (எந்த சாதிக்காரர்) எடை போடறாள்னா பாக்குறோம்! அரிசி, நல்ல அரிசியா? பழுப்பு அரிசியான்னுதான் பாக்குறோம். அதான் எங்க நிலமையும்'' என்றனர் சோகத்துடன்.

நான்கு திசைகளிலும் பரந்து விரிந்திக்கும் அக்ரகாரத்திற்குள்ளே அவர்கள் வசிக்கும் இடமோ ஒரு படுக்கையறை மட்டுமே கொண்ட சிறு வீடு. இவ்வளவுக்குப் பிறகும் அவர்கள் ''மகா பெரியவரை'' (சந்திரசேகரர்) தான் இப்போதும் வழிபடுகிறார்கள். படுகொலையை துயரத்துடன் நினைவுகூர்ந்த அவர்கள், ''50 வருஷமா கூட இருந்தவா, 5 அடி தூரத்துல கொலைகாரனைப் பார்த்தவா (கோயில் பார்ப்பனர்கள்) எவரும் சாட்சி சொல்ல வரமாட்டேங்கிறா! இதுல எங்க ஜாதி எது? நீங்களே சொல்லுங்கோ'' என்றனர், கண்ணீருடன். ''வேலையில இருக்கும் போது செத்தாக்கா, கோயில் நிர்வாகத்துல 70,000 பணம் கொடுப்பாளாம், 'டெத் சர்ட்டிபிகேட்' கேட்டிருக்கா, அதுக்கு இப்ப அலைஞ்சிண்டு இருக்கோம்'' என்றனர், கண்ணீரை அடக்க முடியாமல். நீண்ட மௌனத்திற்குப் பிறகு நாம் அவர்களிடம் விடை பெற்றோம்.


இந்த சாமான்ய மனிதன் சங்கரராமன் தலையைத்தான் சங்கரமடத்தின் கொலைவாள் கொய்து இருக்கிறது. ''ஜெய ஜெய சங்கர'', ''ஹர ஹர சங்கர'' என்று முழங்கிக் கொண்டு மஞ்சள் கொடியைத் தூக்கிக் கொண்டு நாடு முழுக்க திரியும் பார்ப்பன பயங்கரவாத கும்பல்களின் தலைமையகமான காஞ்சி சங்கரமடம் கொலைவெறியர்களின் கூடாரம்தான் என்பதை இச்சம்பவம் மீண்டும் ஒருமுறை உலகத்திற்கு நிரூபித்திருக்கிறது.

— பு.ஜ. செய்தியாளர்கள்

**Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.**

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05










ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ள **"பார்ப்பன பயங்கரவாதிகளின் கூடாரமே சங்கரமடம்"** என்ற பிரசுரத்திலிருந்து...

ஓவியங்கள்:
தோழர் முகிலன், ம.க.இ.க.

